
# திருப்பாவை ஸாரம்



http://acharya.org

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



ஸ்ரீவைஷ்ணவ ரத்நமாலா – 17

# திருப்பாவை ஸாரம்

கீர்த்தி மூர்த்தி ஸ்ரீ உ வே காரப்பங்காடு
வேங்கடாசாரியார் ஸ்வாமி
உபந்யாஸத் தொகுப்பு

பதிப்பாசிரியர்

ஸ்ரீ உ வே ஆத்தான் விஜயராகவாசாரியார் ஸ்வாமி

1999 Rs 5

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீவேங்கட குரவே நம:

# அடியேன் செய்யும் விண்ணப்பம்

கீர்த்தி மூர்த்தி ஸ்ரீ உ வே காரப்பங்காடு வேங்கடாசாரியர் ஸ்வாமி நினைவாக வெளியிடப்பட்டுவரும் ஸ்ரீவைஷ்ணவ ரத்நமாலாவின் இந்த இதழில், ஸ்வாமி ஒருமுறை திருப் பாவை காலக்ஷேப சாற்றுமறை தினத்தில் ஸாதித்த உபந்யாஸம் ஒலி நாடா மூலம் பதிவு செய்யப்பட்டிருந்ததிலி ருந்து ஏடுபடுத்தப்பட்டு *திருப்பாவை ஸாரம்* என்ற தலைப்பில் இப்பொழுது வெளியிடப்படுகிறது. திருப்பாவை அவதாரிகையில் உபக்ரமித்து, 29 பாசுரங்களின் ஸாரார்த்தங் களைச் சுருக்கமாக அருளிச் செய்து, பிறகு *வங்கக்கடல் கடைந்த... என்று தொடங்கும் நிகமப் பாசுரத்தின் வ்யாக் யாநத்தில் காணப்படும் விசேஷார்த்தங்களை ஓரளவு விவரமாக அருளிச் செய்து ஸ்ரீஆண்டாள் ரங்கமன்னார் திருக்கல்யாணத் தில் தம்முடைய உபந்யாஸத்தை முடிவு பெறச் செய்கிறார் ஸ்வாமி. திருப்பாவை அநுபவ ரஸிகர்களுக்கு மிகவும் அநு பாவ்யமாய் அமையும் இச்சிறிய வெளியீட்டைப் பதிப்பாசிரிய ராய் இருந்து வெளியிட்டுக் கொடுத்த ஸ்ரீ உ வே கோயில் ஆத்தான் விஜயராகவாசாரியார் ஸ்வாமி திறத்தில் அடியேனு டைய க்ருதஜ்ஞதையைத் தெரிவித்துக் கொள்கிறேன். அன்பர் கள் இந்த வெளியீட்டை உகந்து ஏற்று அடியேனை ஊக்குவிக்கு மாறு ப்ரார்த்தித்துக் கொள்கிறேன்.

ஸ்ரீவைஷ்ணவ தாஸன்,

முரளிதரன்
13.8.1999.

# திருப்பாவை ஸாரம்

ஶ்ரிய : பதியான ஸர்வேஶ்வரன் சேதநர்களான நம்முடைய ஆத்மக்ஷேமத்தைத் திருவுள்ளம் பற்றி திருவவதாரங்கள் செய்த ருளுகிருன். *பஹூநிமே வ்யதீதாநி ஜந்மாநி தவசார்ஜுந* ( 4–5 ) என்று கீதோபநிஷத்தில் பகவான் தானே ஸ்பஷ்டமாக அருளிச் செய்துள்ளபடி அவனுடைய திருவவதாரங்கள் கணக் கற்றவையாகப் பார்க்கப்படுகின்றன. அப்படிப்பட்ட அவதாரங்க ளுக்குள் ஸ்ரீக்ருஷ்ணவதாரம் பரிபூர்ணவதாரம் என்று கொண் டாடப்படுகின்றது. இந்த அவதாரத்திலேதான் பகவான் அர்ஜு னனை வ்யாஜமாகக் கொண்டு ஸ்ரீகீதா ஶாஸ்த்ரத்தினை அருளிச் செய்திருக்கிருன். இந்த கீதா ஶாஸ்த்ரமானது அவனது திருவ வதார காலத்தில் உள்ளவர்களுக்கு மட்டும் ப்ரயோஜநமாய் இல்லாமல் பிற்பட்ட காலத்தவர்களாகிய நம் போல்வாருக்கும் ஆத்ம க்ஷேமத்திற்கு ஹேதுவாகப் பார்க்கப்படுகிறது. இப்படி இந்த கீதோபநிஷத்தாகிய பகவதுபதேஶம் – அதனுலே உலகத் திற்கு ஏற்பட்டுள்ள நன்மை – ஸ்ரீக்ருஷ்ணவதாரத்திலே எப்படிப் பார்க்கப்படுகின்றதோ அது போல பகவானுடைய மற்ற அவதார ங்களில் பார்க்கப்படுகிறதில்லை. அதனுல் இந்த அவதாரத்திற்கு ஏற்றம் என்று கொண்டாடுகின்றனர் நம்முடைய ஆசார்யர்கள்.

ஸ்ரீக்ருஷ்ணவதாரத்திலே அவனுடைய திவ்ய மஹிஷிகளான ஸ்ரீதேவியும், பூதேவியும் நீளா தேவியும் இவ்வுலகத்திலே அந்த பரம புருஷனுடன் கூடத் திருவவதாரம் செய்திருப்பதாகச் சரித்திரத்திலே குறிப்பிடப்பட்டுள்ளது. ஸ்ரீதேவி ருக்மிணி பிரா ட்டியாகவும், பூதேவி ஸத்யபாமையாகவும், நீளாதேவி **நப்பி**

ன்னைப் பிராட்டியாகவும் க்ருஷ்ணாவதார காலத்திலே எம்பெரு மானுடன் திருவவதாரம் செய்தவர்கள். பகவானுடைய விப வாவதாரம் ஒன்றும் இல்லாத காலத்தில் நம்முடைய க்ஷேமத் தைத் திருவுள்ளம் பற்றி ஸ்ரீபூமிப் பிராட்டியானவள் பெரியாழ் வாருக்குத் திருமகளாக ஆண்டாள் என்கிற திருநாமத்துடன் திருவவதாரம் செய்தனள் என்ற சரித்திரமும் மிகவும் ப்ரஸித் தம். மற்ற பிராட்டிமார்களின் திருவவதாரங்களில், அவர்கள் திருவவதார காலத்தில் பலருக்கு நன்மை ஏற்பட்டிருக்கிறது என்பது உண்மை. ஆனால், பிற்பட்டவர்களுக்கும் நன்மை ஏற்படும்படி க்ரந்தங்களை உபகரித்தது என்னும் சிறப்பு அமை யவில்லை. ஆண்டாள் திருவவதாரத்தினால் திருவவதார காலத் திலும் பலருக்கு மிகவும் நன்மை ஏற்பட்டிருக்கிறது. பிற்பட்ட காலத்திலும் ஆண்டாள் அருளிச்செய்த *திருப்பாவை* *நாச்சியார் திருமொழி* ஆகிய திவ்யப்ரபந்தங்களினால் பலருக்கு மிகவும் பயன் ஏற்பட்டிருப்பதால் ஆண்டாள் திருவவதாரத்திற்கு மிக்க ஏற்றமும் பெருமையும் உண்டு. சுருக் கமாகச் சொன்னால், எப்படி பகவானுடைய திருவவதாரங்க ளில் ஸ்ரீக்ருஷ்ணாவதாரத்திற்கு மிகவும் ஏற்றம் உண்டோ, உலக த்திற்கு மிகவும் நன்மை ஏற்பட்டிருக்கின்றதோ, அவ்வோபாதி பிராட்டிமார்களுடைய திருவவதாரங்களுள், ஸ்ரீபூமிப்பிராட்டி யின் ஆண்டாள் திருவவதாரத்திற்கு மிக்க ஏற்றமும், உலகத் தாருக்கு மிக்க ப்ரயோஜநமும் உண்டு என்று பார்க்கப்படுகிறது. இவளுடைய திவ்யப்ரபந்தங்களினால் உலகத்தாருக்கு மிக்க ப்ரயோஜநம் உண்டு. பகவானுடைய உபதேஶமான ஸ்ரீகீதா ஶாஸ் த்ரத்திற்கும் சில குறைகளைச் சொல்ல முடியும். ஆனால் ஆண் டாள் அருளிச் செய்த திவ்யப்ரபந்தங்களுக்கு எந்தக் குறையும் சொல்ல முடியாது. பகவானுடைய உபதேஶம் ஸம்ஸ்க்ருத மொழியில் அமைந்துள்ளது. அது மிகப் பெரிய ஶாஸ்த்ரம்.

வைதிக மதங்கள் பலவற்றுள் அந்தந்த மதாசார்யர்கள் தத்தம் மதாநுகுணமாக கீதா ச்லோகார்த்தங்களை நயநம் பண்ணும் படியாக அமைந்துள்ளது கீதா சாஸ்த்ரம். கீதா சாஸ்த்ரத்தையும் கீதா ச்லோகார்த்தங்களுக்கு ஏற்பட்டிருக்கிற வ்யாக்யாநங்களையும் ஒருவன் கேட்டு அநுபவிக்கும் காலத்தில் புத்திக்கு ஒரு மயக்கம் ஏற்படும் – எது பகவானுடைய திருவுள்ளம், எது ச்லோகங்களுக்கு உண்மையான அர்த்தம் என்று ஸுலபமாக நாம் அறிந்து கொள்ளும் வண்ணம் அது அமையவில்லை. அவ்வளவு ப்ரௌடமானது கீதா சாஸ்த்ரம். ஆண்டாள் அருளிச்செய்திருக்கும் திவ்யப்ரபந்தங்களோ நம் தாய் மொழியிலே, மிகவும் ஸுலபமான பாஷையிலே யாவருக்கும் புரியும் படி அமைந்திருக்கின்றன. இந்த திவ்ய ப்ரபந்தங்களுக்கு நம் பூர்வாசார்யர்கள் பலர் வ்யாக்யாநங்களை அருளிச் செய்திருந்தாலும்கூட, இந்த ப்ரபந்தங்களின் அடிப்படையான அர்த்த விசேஷங்களிலே ஒருவருக்கும் அபிப்ராய பேதம் கிடையாது.

எம்பெருமான் ச்ரிய:பதியான ஸர்வேச்வரன். அவனது க்ருபையே நம்மை ரக்ஷிக்கிறது. அவனது திருவடிகளைக் கிட்டி அவன் திருவுள்ளம் மகிழும்படி அடிமை செய்து உகப்பிப்பதே மேலான புருஷார்த்தம். அவனே உபாயம், அவனே உபேயம் என்னும் இவ்விரண்டு விஷயங்களிலும் அபிப்ராய பேதம் இல்லை. *நாராயணனே நமக்கே பறை தருவான்* என்பது திருப்பாவை ஆரம்பத்திலேயே ஆண்டாளுடைய திருவாக்கு. பகவானுடைய பெருமைகளைப் பல பாசுரங்களிலே ஸ்பஷ்டமாக அருளிச் செய்திருக்கிறுள் ஆண்டாள். கடைசியாக *ஆய்க்குலத்து உன்தன்னைப் பிறவி பெறுந்தனைப் புண்ணியம் யாமுடையோம்! குறைவொன்று மில்லாத கோவிந்தா! * என்ற இடத்தில் பகவான் ஸ்ரீக்ருஷ்ணனே ஸாக்ஷாத் ப்ரஹ்மம் என்றும்

*எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும்..மற்றை நங்காமங்கள் மாற்று* என்ற இடத்தில் அந்த பரம புருஷனுடைய முகமலர்ச்சிக்குறுப் பாக அடிமை செய்வதே மேலான புருஷார்த்தம் என்றும் ஸ்பஷ்ட மாக இவள்வெளியிட்டிருக்கிருள். இவளுடைய ப்ரபந்தம், ப்ரபந்தார்த்தங்களேக் கேட்கிறவர்கள் மயங்குவதற்கே இடமில்லே.

பகவானுடைய உபதேஶ க்ரந்தமான கீதா ஶாஸ்த்ரத்திற்கும் பிராட்டியினுடைய திவ்யப்ரபந்தங்களுக்கும் மற்ருெரு வாசியும் உண்டு. பகவான் தன் உபதேஶ ரூபமான ஸ்ரீகீதா ஶாஸ்த் ரத்திலே, *நான் புருஷோத்தமன். மிகப் பெரியவன்* என் றெல்லாம் தன் பெருமைகளேப் பலவிதமாகக் கூறி, தன்னிடத் தில் செய்யப்படும் பக்தியானது எப்படியெல்லாம் இருக்க வேண்டும் என்பதையும் அருளிச் செய்து இப்படித் தன்னிடம் பக்தியைச் செய்கிறவன் தன்னே அடைந்து வாழ்வன் என்று பகவத் பக்தியையே – தன்னிடம் செய்யப்படவேண்டிய பக்தியையே ப்ரதாநமாக அருளிச் செய்கிருன். பகவானுன தன்னே ஶரணம் பற்ற வேண்டும் என்று *மாமேகம் ஶரணம் வ்ரஜ* என்ற ஶ்லோகத்திலே உபதேஶம் செய்கிருன்.

சுருக்கமாகச் சொன்னுல் கீதையிலே பகவான் தன் பெருமைகளே யும் தன்னிடத்திலே பக்தியைச் செய்ய வேண்டும், தன்னிடத்தி லே ஶரணுகதியைச் செய்ய வேண்டும் என்ற அர்த்தத்தையும்தான் ஸ்பஷ்டமாக அருளிச் செய்திருக்கிருன். ஆண்டாள் தன்னுடைய ப்ரபந்தங்களிலே *பகவத் பக்தியைச் செய்கிறபொழுது பகவானி டத்தில் மாத்திரம் பக்தியைச் செய்வது போதாது. அவனடியார் களிடத்தில் பக்தியைச் செய்ய வேண்டும். பாகவதர்கள் பர்யந்த மாக பகவத்பக்தியானது பர்யவஸிக்க வேண்டும்* என்றும் இவ் விஷயத்தைப் பல இடங்களில் ஸ்பஷ்டமாக அருளிச் செய்கிருள்.

*பகவானுடைய சரண கமலங்களைப் பற்றி அவன் அபிமாநத்திலே ஒதுங்கி வர்த்திப்பது மட்டும் போதாது. அந்த பரம புருஷனே உபாயம் உபேயம் என்று அத்யவஸித்திருக்கிற பாகவதோத்தமர்களுடைய ஸம்பந்தம் நமக்கு ஏற்படவேண்டும். அவர்களுடைய அபிமாநத்திற்குப் பாத்ரமாய் இருப்பதுதான் விவேகம்* என்று (பகவான் கீதோபதேஶத்திலே விதித்திருக்கும்) ஶரணாகதி தர்மமானது ஆசார்ய பக்தி, பாகவதாபிமான பர்யந்தம் இருக்க வேண்டும் என்று ஶிக்ஷித்துக் காட்டினவள் இவள். தன்னுடைய அநுஷ்டாநத்தையும் அப்படியே அமைத்துக் கொண்டவள்.

*நல்ல என் தோழி! நாகணைமிசைநம்பரர்* (நா. திரு. 10-10) என்னும் பாசுரத்தில் பகவான் க்ருஷ்ணனை அடையப் பெறாத ஆண்டாள், அப்பொழுது இவளுடைய ஶ்ரமத்தைக் கண்டு தவிக்கக் கூடிய தோழியைப் பார்த்து, *எனக்கு க்ருஷ்ணன் கிடைக்கவில்லை. க்ருஷ்ணனை நான் பெறவில்லை என்பது பற்றிக் கவலைப்படவில்லை. அவன் ஶ்ரீமான். மிகப் பெரியவன். நான் மானிட ஜாதியிலே பிறந்திருப்பவள். ஸர்வோத்க்ருஷ்டனான க்ருஷ்ணனை நாம் அடைவது என்றால், அவனது பெருமை எங்கே? நம்முடைய சிறுமை எங்கே? ஆனாலும் நான் பகவானான ஶ்ரீக்ருஷ்ணனை அடைந்தே தீருவேன் என்று இருப்பதற்கு ஆதாரங்கள் உண்டு. தன்னைப் பற்றினவரைத் தான் கைவிடுவதில்லை (ந த்யஜேயம் கதஞ்சந) என்று அவன் அருளிச் செய்த வார்த்தை. மற்றொன்று பெரியாழ்வார் ஸம்பந்தம். பெரியாழ்வார் எம்பெருமானுக்குத் திருவாராதனம் ஸமர்ப்பிப்பர். திருமஞ்சனம் கண்டருளப் பண்ணுவர். அவனுக்குப் புஷ்பங்களை வைத்துப் பூச்சூட வாராய் என்று அழைப்பர். அவனுக்கு ஒரு குறையும் ஏற்படலாகாது, ஸகலவித நன்மைகளும் ஏற்படவேண்டும் என்று

காப்பிட அழைப்பர். அந்தந்த காலத்திலே ஸர்வேஶ்வரனானவன் பெரியாழ்வார் விருப்பத்துக்குச் சேர அவர் ஸந்நிதியிலே வராமல் இருக்கமுடியாது. அந்த காலத்திலே பெரியாழ்வார் அபிமாநத்துக்குப் பாத்ரபூதையான நான் அவனது சரணகமலங்களைப் பெற்று விடுவேன்." என்று பெரியாழ்வாருடைய அபிமாநமே தனக்குத் தஞ்சமாக அருளிச் செய்திருக்கிறாள் ஸ்ரீஆண்டாள்.

"தன்னை பஜனம் செய்ய வேண்டும், தன்னை ஶரணம் பற்ற வேண்டும்" என்றுபகவதுபதேஶம். "பாகவத பர்யந்தமாக பகவதபிமானத்துக்குப் பாத்ரபூதர்களாக ஆக வேண்டும்" என்று இவள் உபதேஶம். இந்த அர்த்தத்தை மிக அழகாகக் காட்டிக் கொடுத்து தன் ஆசாரத்தாலே இது பிறர் மனதில் நன்கு படும்படியாகச் செய்தவள் ஆண்டாள். இந்த முறையில் இவளுக்கும் இவள் அருளிச் செய்த திவ்யப்ரபந்தங்களுக்கும் ஏற்றம் உண்டு.

பாகவத பக்தி – பாகவத அபிமாநம் – பாகவத அநுக்ரஹம் சிறந்தது என்ற விஷயத்திலே ஒரு முக்யமான ப்ரமாணம் உண்டு. அதாவது, "ஸம்ஸார விஷவ்ருக்ஷஸ்ய த்₃வே ப₂லே ஹ்யம்ருதோபமே| கத₃ாசித் கேஶவே ப₄க்திஸ்தத்₃ப₄க்தைர்வா ஸமாகம:||" என்று ஒரு ப்ரமாண வசநம். நம் ஸ்வாமி எம்பெருமானார் இந்த ஶ்லோகார்த்தத்திற்கு ஆஶ்சர்யமானதொரு பாவம் அருளிச் செய்துள்ளார். ஒரு துராத்மாவிற்கு அது ஏற்கனவே செய்த பாவ புண்யமாகிய கர்மத்தை அநுஸரித்து ஶரீரம் கிடைக்கிறது. அந்த ஶரீரத்தை விஷவ்ருக்ஷம் என்று இந்த வசனம் கூறுகிறது. விஷவ்ருக்ஷத்தினுடைய நிழலிலே எவன் ஒதுங்குகிறானோ அவன் அந்த விஷவ்ருக்ஷத்தினுடைய சாயையிலே ஒதுங்கும் பொழுது விஷவ்ருக்ஷத்தினுடைய பாதிப்பினால் இறந்துவிடுவான் என்று ஒரு முறை. ஒரு ஆத்மாவிற்கு கர்மமடியாக ஶரீரம் கிடைக்கிறது.

இந்த ஶரீரமானது ஒரு விஷ வ்ருக்ஷம். எப்பொழுதும் உள்ளவன் – நித்யன் என்று சொல்லும் ஆத்மாவையே ஒருவிதமாக முடிக்கக் கூடியது இந்த ஶரீரம். அப்படிப்பட்ட விஷவ்ருக்ஷமாகிய ஶரீரத் தோடு சேர்ந்து இருக்கும் இந்த ஜீவனுக்கு மிகவும் இனிமையுள்ள 2 பழங்கள் உண்டாகின்றன. அம்ருதம் போல் பரம போக்யமாக இருக்கும் இந்த 2 பழங்கள் ஶரீரத்துடன் சேர்ந்து இருக்கும் ஜீவனுக்கு உண்டாகிறது. ஒன்று பகவத் பக்தி. மற்றொன்று பாகவத பக்தி என்று இந்த ஶ்லோகத்துக்குக் கருத்து. கைகேயி வயிற்றிலே பரதாழ்வான் பிறந்தது போல, ஆத்மாவுக்கு ஒரு விதத்திலே அழிவை உண்டாக்கக்கூடிய ஶரீரமாகிய விஷவ்ருக்ஷத் தைக் கொண்டிருக்கிற இந்த ஜீவனுக்கு பகவத்பக்தி, பாகவத பக்தி என்று இரண்டு அம்ருதம் போன்று பரம போக்யமாயிருக் கும் பழங்கள் கிடைக்கின்றன என்ற கருத்தை உடைய இவ் வசனத்துக்கு நம் ஸ்வாமி எம்பெருமானார் ஒரு ஆஶ்சர்யமான பாவம் அருளிச் செய்திருக்கிறார். மாதம் மும்மாரி பெய்து எங் கும் ஜல ஸம்ருத்தி. பயிர்கள் செழிப்பாக வளர்ந்து உயர்ந்த தான்யங்கள் நிறைந்திருக்கும் ஸுபிக்ஷ காலம். உயர்ந்த சம்பா நெல் பயிராகி, அதை அரிசியாக்கி, அந்நமாக்கி ஸுகமாக அநுபவிக்கும் காலம் ஒருவிதம். க்ஷாம காலத்தில் தாந்யங்கள் ஸுலபமாகக் கிடைப்பதில்லை. அப்பொழுது கஞ்சி முதலான பதார்த்தங்களையே புஜிக்க வேண்டியிருப்பதைப் பார்க்கிறோம். ஆக, ஸுபிக்ஷ காலத்தில் பதார்த்தங்கள் நன்றாகக் கிடைக்கும் பொழுது நல்ல சம்பா சோறு, பால், பழரஸம் போன்றவைகளைப் புஜித்து வாழ்வது என்றும், க்ஷாம காலத்தில் பொருள்கள் நன்கு கிடைக்காதிருப்பதால் அல்ப அந்ந ஆஹாரங்களை புஜித்து வாழ் வது என்றும் லோகவ்யவஹாரத்தைப் பார்க்கிறோம். பொருள் கிடைக்காமல் போனால் கஞ்சியை புஜிக்கிறான். பொருள் கிடைத் தால் நல்ல அந்நத்தைப் புஜிக்கிறான் என்பது போல பாகவத

பக்திக்கு அவகாசம் இல்லாமல் போனால் பகவத்பக்தி என்று ஒரு பாவம். பாகவத பக்திக்கு அவகாசம் இருந்தால் பகவத்பக்தி வேண்டாம் என்று ஒவிதமாய் ரஸமாய் அருளிச் செய்கிறார் நம் ஸ்வாமி எம்பெருமானார். பாகவதபக்திக்குள்ளே பகவத் பக்தி ஒருவிதமாய் அடங்கித்தான் இருக்கிறது. ஒரு காலத்திலே பகவத் பக்தி உண்டாகிறது. எப்பொழுது பகவத்பக்தி உண்டாகிறது என்றால் அது பாகவதர்களுடன் ஸமாகமம் ஏற்பட்டு பாகவத பக்தியோடு வாழப் பெற்ற காலத்தில் இல்லை. பாகவத பக்தி கிடைக்கப் பெறாத காலத்தில்தான் பகவத்பக்திக்கு ப்ரஸக்தி. ஸுபிக்ஷ காலத்திலே நன்றாக புஜித்து வாழ்ந்து போகிறது போலே பாகவத பக்தியுடன் வாழ்ந்து போகிறது. க்ஷாம காலத்தில் ஏதோ இருப்பதைக் கொண்டு வாழ்க்கை நடத்துவது போல பகவத்பக்தி என்று மேற்கூறிய வசநத்திற்கு நம் ஸ்வாமி எம்பெருமானார் ஒரு ஆஸ்சர்யமான பாவம் அருளிச் செய்திருக்கிறார். இது பாகவத பக்தியின் ஏற்றத்தை வெளிப்படுத்தும் முக்யமான ஶாஸ்த்ரார்த்தம் ஆகும். இதைத்தான் முக்யமாகத் திருப்பாவை என்ற திவ்யப்ரபந்தத்திலே ஸ்ரீஆண்டாள் அருளிச் செய்திருக்கிறாள் என்பதை இனி நாம் சுருக்கமாகக் காணலாம்.

பூமிப்பிராட்டியார் பெரியாழ்வார் திருமகளாகத் திருவவதரித்து ஸ்ரீவில்லிபுத்துார் என்கிற திவ்யதேஶத்திலே சிறிய வயதில் - ஐந்து திருநக்ஷத்ரத்தில் எழுந்தருளியிருக்கும் காலம். பெரியாழ்வார் திருமகளாகப் பிறந்தது என்று ஒரு ஏற்றம். பூமிப்பிராட்டியாருடைய திருவவதார விஶேஷம் என்கிற சிறப்பு மற்றொன்று. இவ்விரண்டு சிறப்புகளாலே ஆண்டாளுக்குப் பரமாத்மாவைவிட **வேறு** எந்த ஒரு புருஷனோடும் ஸம்பந்தம் என்ற பேச்சிற்கே **இடமில்லை.** இது தன்னை *மானிடவர்க்கென்று பேச்சுப்படில் **வாழகில்லேன்*** (நா. திரு. 1-5) என்று ஆண்டாள் தானே

ஸ்பஷ்டமாய் அருளிச்செய்திருக்கிருள். இந்த அவதார காலத்திலே பகவான் ஆண்டாளுடைய திருக்கைகளைப் பிடித்து விவாஹம் செய்துகொள்ளும்படி விபவரூபத்தோடு எழுந்தருளியதாகத் தெரியவில்லை. வடபெருங்கோயிலுடையான் ஸந்நிதியில் ஆண்டாள் கிட்டி ஸகலவித பரிமாற்றங்களையும் அந்த பரமபுருஷனிடத்திலே ப்ரார்த்தித்துக் கொள்கிருள். அர்ச்சா ஸமாதியைக் குலைத்துக் கொண்டு எதிர்விழி கொடுத்து அந்தப் பெருமாள் ஆண்டாளிடத்திலே பரிமாற்றம் செய்யவில்லை. அந்தக் காலத்திலே பெண் பிள்ளையாகப் பிறந்தவர்களுக்குப் பகவதநுபவம் ஏற்படாதோ என்றுகூடக் கலங்குகிருள் ஸ்ரீஆண்டாள். அப்பொழுது *ஸ்ரீக்ருஷ்ணவதார காலத்திலே கோபிகைகளுக்குப் பூர்ணநுபவம் கிடைத்திருக்கிறது. பெண்களுக்குப் பகவதநுபவம் கிடைக்காது என்று சொல்லுவதற்கில்லை* என்ற ஸமாதாநமும் அவள் திருவுள்ளத்திலே தோன்றுகிறது. அப்பொழுது அந்த க்ருஷ்ணவதார காலத்திலே ஒரு கோபிகையாகப் பிறக்கவில்லையே என்று மந வேதனைப்படுகிருள் ஆண்டாள். அந்த காலத்திலே கோபிகையாகப் பிறக்காமல் போனலும் கூட கண்ணன், கோபிகைகள், இவர்கள் ஸம்பந்தத்தைப் பெற்றிருக்கிற கோகுலம், கோவர்த்தனகிரி, யமுனு நதி முதலானவிடங்களிலே போய்த் தன்னுடைய ஶ்ரமத்தைப் போக்கிக் கொள்ளலாம் என்று கூடத் தோன்றுகிறது ஆண்டாளுக்கு. அபலையாய் இருப்பவள், பகவானிடத்திலே அதிகமான பக்தியைச் செலுத்துபவளாய் இருப்பவள் அவதார ஸ்தாநத்திலிருந்து கோவர்த்தநகிரி முதலான இடங்களுக்குச் சென்று, பகவதநுபவம் பெற்ற அந்தந்த தேஶங்களைக் கிட்டி அநுபவிப்பதற்கு ஶரீரம் இடம் கொடுக்கவில்லை. அப்பொழுது கண்ணனிடமிருந்து பிரிந்திருந்த காலத்திலேயும் கோபிகைகள் ஒருவாறு அநுகாரத்தினுல் கண்ணனை அநுபவித்துத் தரித்த சரித்ரம் இவளுக்குத் தெரியவர, தானும்

அதுபோல கோபிகைகளுடைய பாவனையை அடைந்து அநுபவித்துத் தரிப்போம் என்று அநுபவித்துத் தரித்த காலத்திலே அவளிடமிருந்து அவதரித்த திவ்யப்ரபந்தம் திருப்பாவை என்பது சரித்ர ப்ரஸித்தம்.

ஸ்ரீஆண்டாள் தன்னை ஒரு கோபிகையாகவும், ஸ்ரீவில்லிபுத்தூரிலே வஸிக்கும் தன்னையொத்த வயதுடைய பெண்களை மற்ற கோபிமார்களாகவும் பாவிக்கிருள். ஸ்ரீவில்லிபுத்தூராகிய திவ்ய தேஶம் திருவாய்ப்பாடியாகவும், அங்குள்ள பெண்கள் கோபிமார்களாகவும், அங்குள்ள வடபெருங்கோயில் ஸ்ரீநந்தகோபருடைய திருமாளிகையாகவும், அங்கே எழுந்தருளியிருக்கும் எம்பெருமாஞகிய வடபெருங்கோயிலுடையான் க்ருஷ்ணஞகவும் ஆகின்றனர். இவள் இவ்வாறு கோபிமார் பாவனையிலே நோன்பு நோற்கும் காலத்திலே இவளுடன் சேர்ந்து இருக்கும் மற்ற கோபிமார்கள் *செல்வச்சிறுமீர்காள்* என்றும் நோன்பை நோற்கும் காலமாகிய மார்கழி மாதமும், ஶுக்ல பக்ஷமும் பதிஞறு கலைகளுடன் கூடியபௌர்ணமி தினமும் அழகாக வர்ணிக்கப்படுகின்றன. ஒரு நல்ல கார்யத்தை ஆரம்பிக்க யத்நம் பண்ணும் பொழுது மாஸமும் பக்ஷமும் நல்ல திவஸமும் வாய்த்திருப்பது அத்யாஶ்சர்யமானது என்று சில கோபிமார்கள் முதலில் காலத்தைக் கொண்டாடிப் பேசி, *பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் நோன்புக்கு வேண்டிய உபகரணங்களைத் தந்தருளுவதாக வாக்தாநம் செய்திருக்கிருன். நோன்புக்கு அங்கமாக நீராட்டத்தைச் செய்ய வேண்டும் என்று இச்சையுள்ள பெண்கள் எல்லாரும் வாருங்கோள்* என்று *மார்கழித் திங்கள்...* என்று தொடங்கும் முதல் பாசுரத்திலே அழைக்கிறதாகச் சரித்ரம்.

ஒருவன் ஒரு ஶுப காரியத்தைச் செய்கிறபொழுது, அந்தக்

கார்யம் பூர்த்தியடையும் வரையில் அதற்கு அங்கமாக இதை யிதைச் செய்ய வேண்டும், இதையிதைச் செய்யலாகாது என்று ஸங்கல்பத்தைச் செய்து கொள்வது உண்டு. அந்த முறையில் நோன்பு என்கிற ரூப கார்யம் பூர்த்தியடையும் வரையில், பாற்கடலில் கண்வளர்ந்தருளுகிற ஸர்வேஶ்வரன் திருவடிகளுக் குப் பல்லாண்டு பாடுவது, விடியற்காலையில் எழுந்திருந்து ஸ்நாநம் செய்வது, ஐயம் பிச்சை என்னும் தானங்களைப் பெற் றுக் கொள்வோர் பெற்றுக் கொள்ளும் வரையில் உபகரிப்பது

இவை செய்ய வேண்டியவைகள் என்றும், நெய் பால் முத லானவற்றை புஜிப்பது, மையிட்டுக் கண்களை அலங்கரித்துக் கொள்வது, புஷ்பத்தையிட்டு தேஹத்தை அலங்கரித்துக் கொள் வது, பிறருக்குத் துன்பம் ஏற்படும்படி பகவானுடைய ஸந்நி தியிலோ அல்லது பாகவதர்களுடைய ஸந்நிதியிலோ சில வார்த் தைகளைச் சொல்வது – இவை நமக்கு விட வேண்டியவைகள் என்று இவர்கள் ஸங்கல்பம் செய்து கொள்ளுகிற பாசுரம் *வையத்து வாழ்வீர்காள்... என்று தொடங்கும் இரண்டாவது பாசுரம்.

இப்படி ஸங்கல்பத்தைச் செய்து கொண்டு, *இந்த கோகுலத்தில் கோபாலர்கள் நம்மை நோன்பு நோற்கும்படியாக அநுமதிதாநம் பண்ணினர்கள். அவர்களுக்குச் சேர இது ப்ரயோஜநம் என்று திருவிக்ரமனுடைய திருநாமங்களை வாயார வாழ்த்திப்பாடி நோன்பு என்கிற வ்யாஜத்தையிட்டு மார்கழி நீராட்டத்தை நாம் செய்தால் உபத்ரவம் சிறிதும் இன்றி மாதம் மும்மாரி பெய்யும். அப்பொழுது எங்கும் செழிப்பு உண்டாகும். பசுக்கள் விஶேஷமா கப் பால் கறக்கும். எங்கும் நீங்காத செல்வம் நிறைந்திருக்கும்* என்று நோன்பு நோற்கச் சொன்ன கோபாலர்களுக்குச் சேர எது சிறந்த நன்மையோ அந்த நன்மையைப் பாரிக்கிறர்கள்

என்ற அர்த்தம் *ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி.... என்கிற மூன்றாவது பாசுரத்தில் சொல்லப்படுகிறது.

இப்படியாக இந்த கோபிமார்கள் பாரித்துக் கொண்டு இருக்கும் போது மழைக்குத் தலைவனான பர்ஜந்ய தேவதை இவர்களிடத்திலே வந்து தண்டனிட்டு *நான் என்ன செய்ய வேண்டும் என்று எனக்கு நீங்கள் ஆஜ்ஞை இட வேண்டும்* என்று ப்ரார்த்தித்துக் கொள்ள, அதற்கு இவர்கள் *நீ இன்னபடி ஜலத்தை ஸமுத்ரத்திலிருந்து கொள்ள வேண்டும். ஆகாசத்தில் எங்கும் பரவ வேண்டும். பகவானுடைய திருமேனி போல் உன் உருவம் கருத்திருக்க வேண்டும். பகவானுடைய திருக்கையிலே உள்ள பாஞ்சஜன்ய ஆழ்வான் போலே இடிமுழக்கமிட்டு, சக்கரத்தாழ்வான் போலே மின்ன வேண்டும். பகவானுடைய சார்ங்கம் என்னும் வில் சரம்சரமாய் அம்பை வர்ஷிக்குமாப்போலே லோகத்தார் வாழும்படி நீ இந்தவிதமாய் ஜல வர்ஷத்தை விசேஷமாக வர்ஷிக்க வேண்டும்* என்று அந்த பர்ஜந்ய தேவதைக்கு ஆஜ்ஞையைச் செய்வதாய் அமைந்துள்ள பாசுரம் *ஆழி மழைக் கண்ணா ... என்று தொடங்கும் நான்காவது பாசுரம்.

இப்படி ஆஜ்ஞையைச் செய்து ஸந்தோஷமாக கோபிகைகள் இருக்கும் பொழுது, சில கோபிகைகள் அந்த ஸங்கத்திலே தம்முடைய ஸம்சயத்தைத் தெரிவித்துக் கொள்கிறார்கள். ஒருவர் ஒரு நல்ல காரியத்தைச் செய்வதாக ஆரம்பிக்கும் பொழுது *ச்ரேயாம்ஸி ப₃ஹுவிக்₄நாநி ப₄வந்தி மஹதாமபி* என்று சொல்லுகிறபடி சில விக்நங்கள் ஏற்பட்டு அந்த கார்யமானது தடைபட்டுப் போய் விடுகிறது. பத்து திக்குகளிலே தடையில்லாமல் செல்லுகிற பராக்ரமம் வாய்ந்தவர் தசரத சக்ரவர்த்தி, சம்பராந்தகன் என்று அவருக்கு ப்ரஸித்தி. அப்படிப்பட்ட தசரத

சக்ரவர்த்தியானவர் ஸ்ரீராமனுக்கு பட்டாபிஷேகம் செய்து வைக்க வேண்டும் என்று பாரிக்கிருர். ராஜரிஷியான விச்வாமித்திரரை ப்ரஹ்ம ரிஷியாக்கின பெருமை வாய்ந்தவர் வஸிஷ்டர். அவர் பட்டாபிஷேகத்திற்கு நாள் இட்டு வைக்கிருர். *ராமோ விக்ரஹ வாந் தர்ம:* என்று கொண்டாடப்படுகிற பகவான் ஸ்ரீராமன் முடி சூட்டிக்கொள்ளப் போகிருன். *ஸஹ பத்ந்யா விஶாலாக்ஷ்யா நாராயணமுபாகமத்* என்று பிராட்டியாரோடே கூடிப் பெரிய பெருமாளே ஆராதிக்கிருன். ஸகல ஜநங்களும் ஸ்ரீராமன் முடிசூட வேண்டும், அந்த மஹோத்ஸவத்தை நாம் கண்களாலே கண்டு களிக்க வேண்டும் என்று பாரிக்கிருர்கள். அயோத்யா நகரவாஸிகள் இதற்காக *ஸர்வாந் தேவாந் நமஸ்யந்தி* என்று ஸகல தேவதைகளேயும் ப்ரார்த்தித்துக் கொள்கிருர்கள். இப்படியிருந்தும் அந்தப் பட்டாபிஷேகத்திற்கு விக்நம் வந்து அது நின்றுவிட்டது. நாமோ சிறிய பெண்கள். அதிக பாபம் உள்ளவர்கள். இந்த நோன்பு என்கிற ஶுப காரியத்தைச் செய்து அந்த வ்யாஜத்தால் கண்ணனுடைய அருளேப் பெற வேண்டும் என்று மநோரதிக்கிறோம். நம்முடைய பாபத்தைப் பார்க்கும்பொழுது இந்த ஶுப கார்யம் நடைபெறுமா? நமக்கு க்ருஷ்ணநுபவம் கிடைக்குமா? என்று ஶங்கிக்கிருர்கள்.

இவர்கள் கோஷ்டியிலே வேதாந்த ஜ்ஞாநம் உடைய பெண்பிள்ளேயொருத்தி இந்த ஸந்தேஹத்திற்குப் பரிஹாரத்தை அத்யாஶ்சர்யமாக வெளியிட்டிருக்கிருள். *நமக்குப் பாபம் அதிகம் உண்டு என்பது உண்மைதான். நம்முடைய பாவங்கள் எல்லாவற்றையும் போக்கிக் கொண்டு பரிஶுத்தர்களாக ஆகிப் பிறகு நல்ல காரியத்தில் இழிவது, பகவாளேப் பற்றுவது என்பது ஒரு காலுமில்லே. நமக்கு பகவான் மனதையும் வாக்கையும் ஶரீரத்தையும் கொடுத்திருக்கிருன். அவன் அநுக்ரஹித்த மநோவாக்காயங்

களைக் கொண்டு அவனை அன்புடன் சிந்தித்தல், அவனது திரு நாமங்களை வாயார வாழ்த்திப் பாடுவது, அவன் திருவடிகளில் புஷ்பம் முதலானவற்றை இட்டுத் தொழுவது போன்ற செயல் களைச் செய்து வருவோமேயானல், நாம் இதுவரை அறிந்தும் அறியாமலும் சேர்த்து வைத்திருக்கும் பாபங்களென்ன, இனி மேல் கவனமின்மையால் செய்யப்போகும் பாபங்களென்ன – இவையெல்லாம் நெருப்பிலே இட்ட பஞ்சு போல அழிந்து போய் விடும். நாமும் நம்முடைய அபிமதத்தைப் பெற்று விடலாம் ஒன்றும் குறைவில்லை" என்று பாபத்தைப் பற்றிப் பயந்து விலக லாகாது. அவன் கொடுத்த மநோவாக்காயங்களைக் கொண்டு நாம் அவனை ஆச்ரயிக்க வேண்டியதுதான் நாம் செய்ய வேண்டிய செயல். அப்படிச் செய்வோமேயானல் நம்முடைய பாபங்கள் நசிந்து நாமும் நம்முடைய அபிமதத்தைப் பெற்று விடுவோம் என்ற தத்வத்தை வெளிப்படுத்தும் பாசுரமாக அமைந்துள்ளது "மாயனை மன்னுவடமதுரை மைந்தனை.. என்று தொடங்கும் ஐந்தாவது பாசுரம்.

இந்தப் பாசுரம் மிகவும் அழகான பாசுரம். ச்ருதிகள், ப்ரஹ்ம ஸூத்ரம் முதலான வேதாந்த க்ரந்தங்களிலே சொல்லப்பட்டுள்ள ஒரு முக்யமான அர்த்த விசேஷத்தை மிக அழகாக எடுத்துச் சொல்லும் பாசுரமிது. பாபத்தைப் போக்கிக் கொண்டு பக வானைக் கிட்டுகிறது என்று பார்த்தால் அந்தக் காலம் ஒருகாலமும் வராது. அதிகமான பாபத்தையே செய்ய நேரிடுமே தவிர, பாபத் தைப் போக்கிக் கொள்வதற்கு வழியில்லை. பாபம் அதிகமாக இருந்தாலும் அந்தந்த காலத்திலே பகவானிடத்திலே ஒருவிதமாக நமக்குத் தொடர்பு ஏற்படவேண்டும். பகவத் ஸம்பந்தமானது நமது பாபங்களைப் போக்கி நமக்குச் செய்ய வேண்டிய நன்மை கள் எல்லாவற்றையும் செய்துவிடும்.

*நாம் க்ருஷ்ணனுடைய ஸம்பந்தத்தைப் பெற்றிருப்பவர்கள். நோன்பு என்கிற காரியத்தைச் செய்ய நாம் யத்நம் பண்ணுகிறோம். இந்தக் கார்யம் நமக்குள்ள பகவத் ஸம்பந்தத்தாலே நன்கு நிறைவேறிவிடும். மேலும் ஆஶ்ரிதர்களுடைய காரியத்தை நிறைவுபடுத்திக் கொடுப்பது என்பது ஸர்வேஶ்வரனுடைய கடமை. ஸ்ரீராமாவதார காலத்திலே ஸ்ரீராம பட்டாபிஷேகம் முதலில் தடைபட்டுப் போனதற்குக் காரணம் பகவத் ஸங்கல்பமில்லாததுதான். தன்னுடைய ஆஶ்ரிதர்களான ஸுக்ரீவன், விபீஷணன் ஆகியோர்களுடைய அபிஷேகத்தை நிறைவேற்றி வைத்து விட்டுத்தான், தான் பிறகு அபிஷேகம் செய்து கொள்ள வேண்டும் என்று அந்த பரம புருஷனின் திருவுள்ளம். அதனால்தான் ஸ்ரீராம பட்டாபிஷேகம் முதலில் தடைபட்டது. பீஷ்மாசார்யரின் ப்ரதிஜ்ஞை, அர்ஜுநனின் ப்ரதிஜ்ஞை இவைகளை பகவான் நிறைவேற்றி வைக்கவில்லையா? தன்னுடைய ப்ரதிஜ்ஞையையும் அழித்துக் கொண்டு, தனக்குப் பொய்யன் என்ற ப்ரஸித்தி ஏற்பட்டாலும் கூட அதைப் பொருட்படுத்தாமல் தன்னுடைய ஆஶ்ரிதர்களுடைய காரியத்தை அவன் எப்படி நிறைவேற்றி வைத்தானோ, அந்த முறையில் நம்முடைய காரியத்தைச் செய்ய நாம் யத்நம் பண்ணினால் அதை நிறைவேற்றி வைக்கும் கடமை ஸர்வேஶ்வரனுடையது* என்று ஸமாதாநம் அருளிச் செய்கிறாள். இதைச் செவியுற்ற கோபிகைகளும் திருவுள்ளம் தெளிந்து பகவானிடத்திலே நோன்புக்கு வேண்டிய உபகரணங்களைப் பெற வேண்டும் என்று ப்ரார்த்திக்கின்றனர்.

இந்த கோபிகைகள் செய்யாதன செய்யோம் என்று ஸங்கல்பித்துக் கொண்டார்கள். அதாவது, *பகவான் மிகவும் ஸுலபன். ஒரு சேதநன் அவனை நேருக்கு நேராகக் கிட்டிப் பற்றலாம். அதிலும் ஸ்ரீக்ருஷ்ணாவதாரத்திலே பகவானுக்கு மிகவும் ஸௌ

லப்யம் உண்டு. கோபிகைகளுக்கும் க்ருஷ்ணனுக்கும் மிகவும் நெருக்கமான ஸம்பந்தம் உண்டு. பகவான் க்ருஷ்ணன் மிகவும் எளியவன். கோபிகைகளிடத்தில் அதிகமான ப்ரீதியையும் க்ருபையையும் உடையவன். ஆனாலும் அவனை நாம் நேருக்கு நேராகப் பற்றிக் கிட்டலாகாது. முன்னோர்கள் பகவத் ஸமாஶ்ரயணம் பண்ணும்போது மஹான்களை முன்னிட்டே பற்றுவது என்ற முறையிலே இருப்பவர்கள். நாமும் க்ருஷ்ணனைப் பற்றும்போது, க்ருஷ்ணனிடத்திலே நெருக்கமான ஸம்பந்தம் பெற்றிருக்கிற கோபிகைகளை முன்னிட்டுப் பற்ற வேண்டும்* என்று தோன்றி, முன்னே எழுந்த கோபிகைகள் *புள்ளும் சிலம்பினகாண்... என்ற ஆறுவது பாசுரம் முதல் *எல்லே இளங்கிளியே... என்னும் 15வது பாசுரம் வரையிலான பத்துப் பாசுரங்களாலே அந்தந்த கோபிமார்களுடைய திருமாளிகைகளுக்குச் சென்று, பொழுது விடிந்ததற்கான அடையாளங்களைச் சொல்லி அந்தந்த கோபிகைகளை எழுப்பித் தங்களுடன் சேர்த்துக் கொண்டு அவர்களை முன்னிட்டு க்ருஷ்ணனைப் பற்றுவதாக ஒரு சரித்திரம் ஆஶ்சர்யமாகச் சொல்லப்பட்டுள்ளது.

பாகவதர்களிடத்திலே பக்தி, பாகவத அநுவர்த்தி இவை மிகவும் முக்யம் என்று அடியேன் முதன் முதலிலேயே விண்ணப்பித்திருந்தேன். *மார்கழித்திங்கள்.... என்ற முதல் பாசுரத்திலேயே *பகவதநுபவம் பண்ணவேணும், அதுதான் நீராட்டம்* என்று குறிப்பிட்டுச் சொல்லி, *அந்த பகவதநுபவத்திற்கு வர வேண்டும் என்ற விருப்பம் உடையவர்கள் எல்லோரும் வாருங்கோள்* என்று அழைப்பதினாலே முதன் முதலிலேயே பாகவத அநுவர்த்தி ஆண்டாளுக்குண்டு என்பது ஸ்பஷ்டமாகத் தெரிகிறது, *நீராடப் போதுவீர்! போதுமின்! * என்ற இடத்திலே. *புள்ளும் சிலம்பினகாண்.. என்ற பாசுரம் முதல் *எல்லே இளங்கிளியே.. என்ற

பாசுரம் வரை உள்ள பத்துப் பாசுரங்களிலே க்ருஷ்ண பக்தி பெற்றிருக்கிற கோபிகைகளை எழுப்பி அவர்களை முன்னிட்டுக் கொண்டு க்ருஷ்ணனிடத்தில் செல்லுகிருர்கள் என்று சொல்லு கிறபடியால் இங்கும் ஆண்டாளுக்குண்டான பாகவத பக்தி, பாகவத அநுவர்த்தி இவைகள் ஸ்பஷ்டமாகத் தெரிகின்றன.

*பிள்ளாய் எழுந்திராய்* (6), *பேய்ப்பெண்ணே!, நாயகப் பெண்பிள்ளாய்!* (7), *கோதுகலமுடைய பாவாய்!* (8) மாமான் மகளே மணிக்கதவம் தாள்திறவாய்!*(9) *நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்*(10) *குற்றமொன்றில்லாத கோவலர்தம் பொற்கொடியே!*(11), *நனைத்தில்லம் சேறுக்கும் நற்செல்வன்தங்காய்!* (12), *போதரிக்கண்ணினாய்!*(13) *நங்காய்! ..நாணாதாய் நாவுடையாய்!*(14), *எல்லே! இளங் கிளியே!*(15) என்று பத்துப் பாசுரங்களாலே பத்து வகை களிலே ஸ்வபாவம் பெற்றிருக்கிற கோபிகைகளை எழுப்பி அவர்களை முன்னிட்டுக் கொண்டு கண்ணனிடத்தில் செல்லுகிரு ர்கள் என்று இந்தப் பத்துப் பாசுரங்களிலே நாம் பார்க்கிறோம்.

மநுஷ்ய ஜந்மாவிலே பிறந்திருப்பவர்கள் ஒருவரைப் போலே ஒருவர் இருக்க மாட்டார்கள் என்று நாம் பார்க்கிறோம். கோபிகை களுக்குப் பொதுவாக க்ருஷ்ணபக்தி உண்டு என்றாலும் கூட ஒரொரு கோபிகையுடைய தன்மை ஒரொரு விதமாய் இருக்கிறது. இதை ஶாஸ்த்ரத்தின் உண்மையை ஒட்டிப்பார்க்க வேண்டும். பத்துப் பாசுரங்களிலே பத்து வகையான கோபிகைகளை எழுப்பி இருப்பது என்பது அந்த முறையிலே மிக அழகாக அமைந்துள்ளது.

ப்கவானிடத்திலே பக்தி கொண்டவர்கள் பாகவதர்கள். பகவானை

காட்டிலும் பாகவதர்களுக்குச் சிறப்பு உண்டு. பாகவதர்களுடைய கூட்டத்திலே நாமும் ஒருவராய்ச் சேர்ந்து கலக்க வேண்டும், அப்படிக் கலந்து பகவானை அநுபவிக்க வேண்டும். அந்த அநுபவத்தாலே ஏற்படும் அதிஶயம்தான் மிகச் சிறந்தது என்ற உண்மை ஒரு கோபிகைக்குத் தெரியாது. பகவானைக் கிட்டி அடிமைகள் முதலானவற்றைச் செய்துகொண்டு போருகிற வாழ்வே வாழ்வு என்பது மட்டும் தெரியும். அந்த கோபிகையை *பிள்ளாய் எழுந்திராய்* என்று எழுப்பி அவளை முன்னிட்டுக் கொண்டு கண்ணனிடத்திலே செல்லுகிறதாக அமைந்துள்ளது *புள்ளும் சிலம்பினகாண்.. என்று தொடங்கும் ஆறுவது பாசுரம்.

பாகவத குழாத்திலே தானும் ஒரு வஸ்துவாய்த் திகழ்ந்து பகவானைக்கிட்டி அடிமை செய்கிறதுதான் நல்லது என்று அறிந்திருக்கச் செய்தேயும், அறியாதவள் போலே கிடக்கிறவள் ஒருத்தி. அந்த கோபிகையை *நாயகப் பெண்பிள்ளாய்!* என்று உணர்த்தி அவளை முன்னிட்டுக் கொண்டு கண்ணனிடத்திலே செல்லுகிறதாக அமைந்துள்ளது *கீசுகீசென்று... என்று தொடங்கும் ஏழாவது பாசுரம்.

கண்ணனிடத்திலே அதிகமான பக்தி கொண்டிருப்பவள் ஒரு கோபிகை. கண்ணனுடைய ப்ரீதிக்குப் பாத்ரபூதையாய் இருப்பவள். அந்த கோபிகையை *கோதுகலமுடைய பாவாய்!* என்று அழைத்து எழுப்பி அவளை முன்னிட்டுக்-கொண்டு கண்ணனிடத்திலே செல்லுகிறதாக அமைந்துள்ள பாசுரம் *கீழ்வானம் வெள்ளென்று.. என்று தொடங்கும் எட்டாவது பாசுரம்.

வேதாந்தங்களிலே ஶரீரத்தையும் ஶரீர ஸம்பந்தம் பெற்றுள்ள தேஹ பந்துக்களையும் விடச் சொல்லியிருப்பது உண்மைதான்.

ஆயினும், ஶரீர ஸம்பந்தம் பெற்றிருக்கிற தேஹபந்துக்கள் பக வானிடம் பக்தி உடையவர்களாக இருந்தால் அவர்களை விடக் கூடாது. நம் ஸ்வாமி எம்பெருமானுர் ஸந்யாஸாஶ்ரமம் பெற்றுக் கொள்ளும்போது முதலியாண்டான் திருமேனி ஸம்பந்தம் பெற்ற வராய் இருக்கச் செய்தேயும், அவர் சிறந்த மஹாநுக இருக்கிற படியால் அவரைத்தவிர மற்றவர்களை விட்டுவிட்டேன் என்று அருளிச் செய்திருக்கிருர். ஸ்ரீஆண்டாளும் திருவாய்ப்பாடியில் உள்ள கோபிகைகளை இடைப்பெண்கள் என்று பார்க்கவில்லை. க்ருஷ்ணனோடு ஸம்பந்தம் பெற்றிருப்பவர்கள் – அந்த க்ருஷ் ணனோடு ஸம்பந்தம் பெற்றவர்களிடத்திலே அவர்களுடைய தேஹ ஸம்பந்தமும் உத்தேஶ்யம் என்கிற தத்வத்தை நன்ருகத் திருவுள்ளம் பற்றி ***மாமான் மகளே! மணிக்கதவம் தாள் திறவாய்!*** என்று அழைக்கிருள்.

பக்தியைச் செய்து அவ்வழியாலே ஸர்வேஶ்வரனைப் பெற வேண்டும் என்று இருக்காமல் *ஏஷஹ்யேவாநந்தயாதி* என்று ஶ்ருதியில் சொல்லுகிறபடி கண்ணனுலேயே கண்ணனைப் பெற்று ஆநந்தத்தை உடையவளாய் இருக்கும் ஒரு கோபிகையை எழுப்புகிறதாக அமைந்துள்ளது ***நோற்றுச் சுவர்க்கம்..** என்று தொடங்கும் பத்தாவது பாசுரம்.

கோபாலர்கள் தங்களுடைய தர்மத்தைத் தாம் சரிவரச் செய்து போருகிறவர்கள். யுத்த பூமியில் நன்ருக யுத்தம் செய்வதற்குண் டான வீர்ய ஶௌர்ய பராக்ரமங்களை உடையவர்கள். ஒரு வகைக் குற்றமும் இல்லாதவர்கள். அவர்களுடைய ஸந்ததியிலே தோன்றி வீரத்தாலும் வயதாலும் குல ஸம்பத்தாலும் லக்ஷணத்தாலும் க்ருஷ்ணனோடு பலவகையிலும் ஒத்து இருப்பவளான ஒரு கோபி கையை ***குற்றம் ஒன்றில்லாத கோவலர்தம் பொற்கொடியே!***

என்றழைத்து அவளை முன்னிட்டுக் கொண்டு கண்ணனிடத்தில் செல்லுகிறதாக *கற்றுக்கறவைக் கணங்கள்பலகறந்து... என்று தொடங்கும் பதினோருவது பாசுரம் அமைந்துள்ளது.

ஸ்ரீராமாவதார காலத்தில் இளையபெருமாள் கூட இருந்து தன்னுடைய ஆஶ்ரம தர்மங்களையும் விட்டுவிட்டு அந்த பகவானிடத்தில் *அஹம் ஸர்வம் கரிஷ்யாமி..* என்று ப்ரார்த்தித்து ஸமஸ்த கைங்கர்யங்களையும் செய்து உகப்பித்து அப்படியே காலத்தைக் கழித்தது போலே, ஸ்ரீக்ருஷ்ணாவதாரத்திலேயும் க்ருஷ்ணனை விட்டுப் பிரியாமல் எப்பொழுதும் அவனுக்கு அடிமை செய்து உகப்பிக்கிறவன் ஒரு கோபாலன். அந்த கோபாலன் பகவத் கைங்கர்யத்திலே ஈடுபட்டிருப்பதினால், பால் கறப்பது என்ற தன்னுடைய தர்மத்தையும் விட்டிருப்பவன். அப்படிப்பட்ட நல்ல (கைங்கர்ய) ஸம்பத்தைப் பெற்றிருக்கிற கோபாலனுடைய ஸம்பந்தத்தாலே பெருமை பெற்றிருப்பவளாய் அவனுடைய தங்கையாய் இருப்பவளான ஒரு கோபிகையை *நற்செல்வன் தங்காய்! என்று விளித்து அவளை முன்னிட்டுக் கொண்டு கண்ணனிடத்திலே செல்லுகிறதாக அமைந்துள்ளது *கனைத்திளங்கற்றெருமை கன்றுக்கிரங்கி.. என்று தொடங்கும் பன்னிரண்டாவது பாசுரம்.

*புள்ளின்வாய் கீண்டானைப் பொல்லாஅரக்கனை... என்னும் பதின்மூன்றுவது பாசுரத்திலே கண்ணழகு உள்ள ஒரு கோபிகையை எழுப்பி அவளை முன்னிட்டுக் கொண்டு க்ருஷ்ணனிடத்திலே போகிறதாகச் சொல்லப்படுகிறது. *உங்கள் புழைக்கடைத் தோட்டத்துவாவியுள்.. என்று தொடங்கும் பதினாலாவது பாசுரத்திலே கீர்த்தி பெற்றிருக்கிறவள், செருக்கில்லாதவள், திருவடியினுடைய வார்த்தை எப்படி போக்யமாய் இருக்கிறதோ அதைப் போலே நாவை உடையவளான ஒரு கோபிகையை எழுப்பி

அவளை முன்னிட்டுக் கொண்டு கண்ணனிடத்திலே செல்லுகிற தாகச் சரித்திரம் சொல்லப்பட்டிருக்கிறது.

*எல்லே! இளங்கிளியே!... என்னும் பாசுரம் கோபிகைகளை ஆண்டாள் எழுப்புகிற பத்துப் பாசுரங்களிலே கடைசிப் பாசுரம். ஆண்டாள் இப்பாசுரத்திலே எழுப்புகிற பெண்பிள்ளையானவள் கோகுலத்திலுள்ள கோபிகைகள் எல்லோரையும் ஒன்று சேர்த்துப் பார்க்க வேண்டும் என்று இருக்கிறவள். ஆண்டாள் இந்தக் கோபிகையை, அவளுடைய திருமேனி நிறம், அவயவ ஶோபை, பேச்சின் இனிமை, பாட்டின் போக்யதை முதலானவைகளைக் கொண்டாடி எழுப்பி, அவளை முன்னிட்டுக் கண்ணனிடத்தில் செல்லுவதாக அமைந்துள்ளது இப்பாசுரம்.

இப்படி பத்துப் பாசுரங்களாலே பத்து கோபிகைகளை உணர்த்தி அவர்களை முன்னிட்டுக் கண்ணனிடத்தில் செல்லுவது என்பது திருவாய்ப்பாடியிலே எந்த எந்த திருமாளிகைகளிலே எந்த எந்த கோபிமார்கள் தூங்குகின்றனரோ, அவர்கள் அனைவரையும் ஆண்டாள் எழுப்பிக்கொண்டு கண்ணனிடத்தில் செல்லுவதற்கு உபலக்ஷணம் என்று நமதாசார்யர்கள் அருளிச் செய்து உள்ளனர்.

எல்லா கோபிமார்களையும் ஒன்று சேர்த்து நந்தகோபாலன் திருமாளிகைக்கு வந்து அங்குள்ள கோயில் காப்பான், வாயில் காப்பான் ஆகியவர்களை வந்தடைந்து அவர்கள் அநுமதியைப் பெற்று உள்ளே போகிறதாக *நாயகனாய் நின்ற நந்தகோபனுடைய.... என்று தொடங்கும் பதினாறுவது பாசுரத்தின் ஸாரமான அர்த்தம். கோயில் காப்பான், வாயில் காப்பான் என்று சொல்லப்படுகிற அந்தந்த அதிகாரிகள் பகவானுடைய திருமேனியை **ரக்ஷிக்க**

வேண்டும் என்று தூங்காமல் ஜாக்கிரதையாக இருக்கிறவர்கள். அவர்களைக் கிட்டி அவர்களைத் தங்கள் விஷயத்தில் அபிமுகமாக இருக்கும்படி கொள்வதுதான் இங்கே முக்யமாகக் கொள்ள வேண்டிய விஷயம். அவர்களைத் தங்கள் விஷயத்திலே அபிமுக மாக இருக்கும்படி செய்து கொண்டு அவர்களுடைய அநுமதி பெற்று உள்ளே சென்றதும் முதல் கட்டிலே நந்தகோபரும், இரண்டாம் கட்டிலே யசோதைப் பிராட்டியும், மூன்றும் கட்டிலே பகவான் ஸ்ரீக்ருஷ்ணனும், நான்காவது கட்டிலே நம்பி மூத்த பிரானும் இந்த முறையிலே கண் வளர்ந்து கொண்டிருக்கிறுர்கள் என்பதைக் காண்கிறுர்கள்.

முதலிலே நந்தகோபாலன் யசோதைப் பிராட்டி இவர்களை எழு ப்பி அவர்களுடைய அநுமதி பெற்று *அம்பரமே தண்ணீரே சோறே அறஞ்செய்யும்... என்கிற பதினேழாவது பாசுரத்தில் *அம்பரமூடறுத்தோங்கி உலகளந்த உம்பர்கோமானே!... என் னும் இப்பகுதியில் கோபிகைகள் கண்ணனை எழுப்புகிறுர்கள். இந்த இடம் முதல் கோபிமார்களுக்கும் பகவான் க்ருஷ்ணனுக்கும் மிகவும் நெருங்கிய சரித்திரம் பார்க்கப்படுகிறது. அவர்களுக்கு அந்தப் பரம புருஷனிடத்தில் ஏற்பட்ட பரிமாற்றங்களை இதுமுதல் பல பாசுரங்களிலே நாம் நன்ருகப் பார்க்கலாம். இந்த இடத்திலே கோபிகைகளுடன் எப்போதும் பழகிப் போருகின்றவனுகையா லே கோபிகைகளுக்குக் கண்ணனுடைய ஸ்வபாவம் தெரியாமல் இல்லை. நேருக்கு நேர் க்ருஷ்ணனிடத்தில் சென்று அவனை எழுப்பினுல் *என்னுடைய பிதாவான நந்தகோபருக்கும் மாதா வான யசோதைக்கும் நான் பரதந்த்ரன் ஆகையாலே அவர்களு டைய அநுமதி இல்லாமல் நான் உங்களுடைய காரியத்தைச் செய்வதற்கில்லை* என்று தட்டிக் கழிக்கக்கூடும் என்ற அபிப்ரா யத்தினுல், சாதுர்யம் மிக்கவர்களாகையாலே முதலில் நந்தகோப

ரையும் யசோதைப் பிராட்டியையும் உணர்த்தி, அவர்களுடைய அநுமதியைப் பெற்றுக் கொண்டு கண்ணபிரான் பள்ளியறை வாசலிலே சென்று. *நான் மாதா பிதாவிற்கு பரதந்த்ரன் என்று நீ சொல்லுவதற்கு இடமில்லை, உன்னுடைய மாதா பிதா இவர்களுடைய அநுமதி பெற்று நாங்கள் வந்து சேர்ந்தோம். இந்திரன் முதலான தேவர்களுக்கு நீ கார்யம் செய்கிறவன். அருள் புரிகின்றவன். உன்னைச் சேர்ந்த, உன்னையே பரம புருஷார்த்தமாய் எல்லாமாகப் பற்றி இருக்கும் எங்கள் விஷயத்தில் நீ அவசியம் அருள் புரியவேண்டும்* என்னும் ஆர்த்தி தோற்ற *அம்பரமூடறுத்தோங்கி உலகளந்த உம்பர் கோமானே உறங்காதெழுந்திராய்* என்று ப்ரார்த்திக்கிறார்கள்.

அந்தக் காலத்திலே பகவான் உணர்ந்து எழுந்திருக்கவில்லை. அடுத்த கட்டில் பலராமன் படுத்துக் கொண்டிருக்கிறான். அந்த பலராமன் ஸ்ரீராமாவதார காலத்திலே லக்ஷ்மணனாய் எழுந்தருளி இருந்தவன். அப்பொழுது லக்ஷ்மணனைப் புருஷகாரமாகப் பெற்றுப் பகவானைப் பற்றியிருந்தவர்கள் பலருண்டு. அவர்களுக்குப் பலம் கிட்டியிருந்ததால் அதை அநுஸரித்து நாமும் பலராமனைப் பற்றி ஸ்ரீக்ருஷ்ணனைப் பெறலாம் என்று தோற்றி *செம்பொற் கழலடிச் செல்வா! பலதேவா! ... உறங்கேல்* என்று அந்த கோபிகைகள் பலராமனுடைய சிறப்புகளைச் சொல்லி அவனை உணர்த்தி *உனக்குப் பரதந்த்ரனாய் உன் தம்பியாய் இருக்கும் க்ருஷ்ணனும், அவனுக்குப் பரதந்த்ரனாய் அவனுக்குப் படுக்கையாய் இருக்கும் நீயும் தூங்காமல் எழுந்தருளி எங்களை அநுக்ரஹிக்க வேண்டும்* என்று வேண்டிக் கொள்கிறார்கள். அந்தக் காலத்திலே பலராமனும் எழுந்திருக்கவில்லை, க்ருஷ்ணனும் எழுந்திருக்கவில்லை. விவாஹ காலத்தில் பாணிக்ரஹணம், திருமாங்கல்யதாரணம், அம்மி மிதித்தல் போன்றவையெல்லாம்

மிக முக்யமான செயல்கள். கல்யாணத்திலே திருமாங்கல்ய தாரணம் மறந்து போகிறது என்பது எப்படிக் கூடாதோ அதைப் போலவே பகவானை நாம் பற்றும்போது பிராட்டியை முன்னிடுகிறது என்பதையும் விட்டுவிடக்கூடாது. பிராட்டியைப் புருஷகாரமாகப் பற்றுவது என்பது மிக மிக முக்யமானது. அதைத் திருமாங்கல்யதாரண ஸ்தாநத்திலே வைத்து அருளிச் செய்திருக்கிறுர்கள் நம்முடைய பூர்வாசார்யர்கள். பக்கத்தில் பிராட்டி இல்லாமல் இருக்கும் பொழுது நம்பி மூத்தபிரானை எழுப்பி அவனை முன்னிட்டுப் பகவானிடத்திலே கார்யம் கொள்வது என்பது கூடும். அது முறையுமாகும். இந்த அவதாரத்திலே பகவானுக்கு நப்பின்னைப் பிராட்டி ப்ரதாந மஹிஷியாய் இருக்கிறவள். அந்தப் பிராட்டியோடுகூட கண்ணன் திருப்பள்ளியறையிலே திருக்கண் வளர்ந்துகொண்டிருக்கும் பொழுது அவளை முதலில் உணர்த்தி அவளை முன்னிடாமல் நாம் பலராமனை எழுப்பி முன்னிடுவது என்பது உசிதமன்று என்று கோபிகைகளுக்குப் படுகிறது. அப்பொழுது *உந்துமதகளிற்றன் ஓடாததோள்வலியன்...மருமகளே நப்பின்னாய்!* (1 8) என்ற இடத்திலே அந்த நப்பின்னைப் பிராட்டியை உணர்த்தி, *செந்தாமரைக்கையால் சீரார் வளையொலிப்ப வந்துதிறவாய் மகிழ்ந்து* என்று ப்ரார்த்திக்கிறுர்கள். *திருக்கையில் உள்ள வளைகள் கலந்து ஶப்திக்கும்படியாக எழுந்தருளிக் கதவைத் திறந்து எங்களை அநுக்ரஹிக்க வேண்டும்* என்று கோபிகைகள் நப்பின்னைப் பிராட்டியை வேண்டிக் கொள்வதாக அமைந்துள்ளது *உந்துமதகளிற்றன்.. என்று தொடங்கும் பதினெட்டாவது பாசுரம்.

**அந்தக்** காலத்திலே நப்பின்னைப் பிராட்டி கதவைத் திறந்து **கோபிகைகளு**க்கு அநுக்ரஹிக்க வேண்டும் என்று எழுந்து வரு**கிறுள். அப்பொழுது** பகவான் *கோபிகைகள் நம்மைச் சேர்ந்த

வர்களன்றே? கோபிகைகள் காரியத்தை நப்பின்னை செய்தாள் என்றிருக்கக் கூடாது. அது க்ருஷ்ணன் செய்தான் என்றுதான் அமைய வேண்டும்* என்று திருவுள்ளம் பற்றிக் கதவைத் திறக்க வந்த நப்பின்னை பிராட்டியை அவள் கதவைத் திறக்கமாட்டாதபடித் தடுத்து, வலுக்கட்டாகக் கட்டிக் கொண்டு மஞ்சத்திலே அந்த பிராட்டியாரோடு கூடியிருக்கிறான். அந்தப் பரம புருஷனை *மலர்மார்பா வாய்திறவாய்* என்று *நீ இருக்கிற இடத்திலே இருந்து அர்ஜுனன் சோகம் தீரும்படியாக *மாஶுச:* என்று வார்த்தைச் சொன்னதுபோல, கோபிகைகளான எங்களுடைய ஶோகம் தீரும்படி நல்வார்த்தைச் சொல்ல வேண்டும்* என்று ப்ரார்த்தித்துக் கொள்கிறார்கள்.

அந்தக் காலத்திலே *நாம் கதவைத் திறக்கலாகாது என்று இவன் நம்மைத் தடுத்தான். இவன் கோபிகைகள் காரியம் செய்தவனாக நிறம் பெறலாகாது* என்று தோற்றி நப்பின்னைப் பிராட்டியானவள் அவனுக்குத் தன் திருக்கண்களாலே ஜாடை காட்டுகிறாள். அந்த நப்பின்னையை *மைத்தடங்கண்ணினாய்!* என்று இந்த கோபிகைகள் விளித்து, *நீ புருஷகாரபூதையாய் இருந்து எங்களை பகவானிடத்திலே சேர்த்து வைப்பவள். அவன் சோதிவாய் திறந்து வார்த்தை சொல்லும்போது அவனைத் தடுப்பது என்பது உன்னுடைய நிலைக்குச் சேராது, உன்னுடைய க்ருபைக்குச் சேராது. அவன் எங்களை ஏற்றுக் கொள்ளும்படி நீ புருஷகாரத்தைச் செய்ய வேண்டும். நீ க்ருபை பண்ண வேண்டும்* என்று ப்ரார்த்தித்துக் கொள்கிறார்கள். இந்தக் கருத்தில் அமைந்ததுதான் *குத்துவிளக்கெரியக் கோட்டுக்கால் கட்டில்மேல்... என்று தொடங்கும் பத்தொன்பதாவது பாசுரம்.

அந்தக் காலத்திலே க்ருஷ்ணனும் எழுந்திருக்கவில்லை.

நப்பின்னையும் எழுந்திருக்கவில்லை. *முப்பத்துமூவர்... என்னும் அடுத்த பாசுரத்திலே (20), *இந்த லோகத்திலே பற்பல அவதாரங்கள் செய்து அந்தந்த அவதார காலங்களில் ஆஸ்ரித ரக்ஷணத்தைச் செய்து உலகத்திற்கு நன்மை உண்டு பண்ணிய கீர்த்தி படைத்தவனான நீ இப்பொழுது எங்களை ஏன் என்று கேட்காமல் இப்படியே இருக்கும் பக்ஷத்தில் அந்த கீர்த்தி முதலான குணங்களை இழந்துவிடுவாய்* என்று சொல்லிப் பகவானை எழுப்புகிறார்கள்.

அப்படியும் அவன் எழுந்திருக்கவில்லை. நப்பின்னை திறத்திலே நாம் சொல்லத்தகாத வார்த்தைகளை *தத்துவமன்று தகவு என்று சொல்லியிருப்பதினால் எம்பெருமான் திருவுள்ளத்திலே புண்பட்டு இருக்கிறது போலும் என்று தோற்றி, நப்பின்னைப் பிராட்டியின் ஆத்ம குணங்களையும், விக்ரஹகுணங்களையும் கொண்டாடி மறுபடியும் அவளை கோபிகைகள் எழுப்புவதாக அமைந்துள்ளது அடுத்த பாசுரம்.

*செப்பன்னமென்முலைச் செவ்வாய்ச்சிறுமருங்குல் நப்பின்னை நங்காய்! திருவே! துயிலெழாய்* என்று பிராட்டியின் ஆத்ம குண, விக்ரஹ குணங்களைப் புகழ்ந்து *நீ எழுந்திருக்க வேண்டும். நோன்புக்கு வேண்டிய ஆலவட்டம், கண்ணாடி இவைகளைத் தர வேண்டும். உனது மணாளனான ஸ்ரீக்ருஷ்ணனையும் கொடுக்க வேண்டும்* என்று ப்ரார்த்திக்கிறார்கள். அக்காலத்தில் நப்பின்னையும் உகந்து எழுந்து கோபிகைகளின் கோஷ்டியில் தானும் ஒருத்தியாகக் கலந்து *உங்களைப் போல நானும் ஒரு கோபிகை. நாம் எல்லோரும் சேர்ந்து கண்ணனை எழுப்புவோம்* என்று சொல்ல எல்லா கோபிகைகளும் அப்பொழுது ஒன்றுசேர *ஏற்ற கலங்கள் எதிர்பொங்கிமீதளிப்ப...என்று தொடங்கும் இருபத்து

ஒராவது பாசுரத்தாலேயும், *அங்கண்மாஞாலத்தரசர்... என்று தொடங்கும் இருபத்திரண்டாவது பாசுரத்தாலேயும் கண்ணனிடம், *உனக்கே உரியவர்கள் நாங்கள். உன்னை விட்டுவிட்டு, விட்ட (வேறு) இடத்திற்குச் செல்ல வேண்டும் என்கிற எண்ணம் எங்களுக்குச் சிறிதளவும் கிடையாது. உனக்கே உரியவர்களாய், உனக்கு அடிமைகளாய் இருக்கும் எங்களை நீ ஏற்று விநியோகம் கொண்டால் அதனாலே ஏற்படும் ப்ரயோஜநம் உன்னைச் சேர்ந்தது. அப்படி ஏற்று விநியோகம் கொள்ளாதபோது அதனால் ஏற்படும் குறையும் உன்னைச் சேர்ந்தது* என்று விண்ணப்பிக்கிறார்கள்.

அந்தக் காலத்தில் பகவானும் திருப்பள்ளியிலிருந்து உணர்ந்தெழுந்து *உங்களுக்கு என்ன வேண்டும்?* என்று கேட்கிறான். அதற்கு இவர்கள், *திருப்பள்ளியறையிலிருந்து கொண்டு வார்த்தை சொல்லுவது என்பது உசிதமன்று. முன் மண்டபத்திலே திவ்ய ஸிம்ஹாஸநம் ஸமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த சீரிய சிங்காதனத்தளவும் நீ ஸிம்ஹகதியில் நடந்து வரவேண்டும். இந்த சீரிய சிங்காதனத்திலே எழுந்தருளியிருந்து கோபிகைகளாகிய நாங்கள் எந்த ஶ்ரேயஸ்ஸை உன்னிடமிருந்து பெற வேண்டும் என்று மநோரதித்து வந்துள்ளோமோ, அதை நீயே ஆராய்ச்சி செய்து எங்கள் விஷயத்திலே க்ருபை செய்தருள வேண்டும்* என்று ப்ரார்த்திக்கிறார்கள். இவ்வாறாக அமைந்துள்ளது *மாரிமலைமுழைஞ்சில்... என்று தொடங்கும் இருபத்து மூன்றாவது பாசுரம்.

பகவானும் கோபிகைகள் ப்ரார்த்தித்தபடியே திருப்பள்ளியறையிலிருந்து எழுந்தருளுகின்றான். நப்பின்னை பிராட்டியுடன் அவன் சீரிய சிங்காதனத்திலே வீற்றிருக்கும்பொழுது அவனுடைய திரு

வடிகளைக் கைகளாலே தொடுவது, கண்களிலே ஒற்றிக் கொள்வது என்று அநுபவிக்கிறுர்கள். இப்படி அநுபவிக்கும் காலத்தில் மிகுந்த ஸௌகுமார்யத்தாலே அவன் திருவடிகள் கன்றிப்போக, அதில் ஈடுபட்டு அவனுடைய திருவடிகளுக்குப் பல்லாண்டு பாடுகிறுர்கள்.

இவ்வாறுக மங்களாஶாஸநம் ஆனபிறகு பகவான், *மங்களாஶாஸநம் செய்வது என்பது உங்களுக்கு இயற்கையாக உண்டு. அது இருக்கட்டும். எதை விரும்பி நீங்கள் என்னிடத்தில் வந்தீர்கள்?* என்று கோபிகைகளைப் பார்த்துக் கேட்கிறுன். அதற்கு கோபிகைகள், * உன்னிடத்தில் எதையும் பெற்றுப் போக வேண்டும் என்று நாங்கள் வரவில்லை. உன்னையே பரம ப்ரயோஜநமாக விரும்பி வந்தோம். உன்னை அர்த்தித்து வந்தோம். உனக்குக் கைங்கர்யம் செய்ய வந்தோம்* என்று ப்ரார்த்திக்கிறுர்கள். இதைச் சொல்லும்போது கோபிகைகள் மேலும், *உன்னை நாங்கள் விரும்பி வந்தோம். எங்கள் அபிமதத்தைச் செய்தருளும் பக்ஷத்தில் நாங்கள் எங்கள் வருத்தம் தீர்ந்து மகிழ்ந்திடுவோம்* என்று தங்கள் அபிப்ராயத்தை விண்ணப்பிக்கிறுர்கள்.

அதற்கு பகவான், *பறை தருதியாகில்* என்று சொன்னீர்களே. அதாவது என்ன?* என்று கேட்க அதற்கு இவர்கள், *மாலே! மணிவண்ணு! ... என்ற பாசுரத்தில், *நோன்பு என்பது ஶிஷ்டர்கள் ஆசரித்துவரும் ஒரு தர்மம். அந்த நோன்பிற்கு அங்கமாக மார்கழி நீராட்டம் செய்வது என்பது உண்டு. அதற்கு வேண்டியவைகள் ஶங்கங்கள், பறைகள், திருப்பல்லாண்டு பாடுவார், கோலவிளக்கு, கொடி, விதாநம் என்று சொல்லக்கூடிய பதார்த்தங்கள். இவற்றைத் தந்தருள வேண்டும்* என்று வேண்டிக் கொள்கிறுர்கள்.

நோன்பு நோற்றுத் தலைக்கட்டினபிறகு ஸந்மாநமாகப் பெற வேண்டியவை இவை என்னும் விஷயத்தை *கூடாரைவெல்லும் சீர்க் கோவிந்தா!.. என்னும் பாசுரத்தில் கோபிகைகள் ப்ரார்த்திக் கிறுர்கள். பிறகு அங்கமான ஶங்கம் முதலானவற்றையும் இன்னும் கோபிகைகளுக்கு எது அபிமதமோ எல்லாவற்றையும் பகவான் தருவதாகச் சொல்லுகிறுன். *புண்யமுடையவர்களுக்கே இவை ஸித்திப்பதால் நீங்கள் என்ன புண்யம் செய்திருக்கிறீர்கள்?* என்று வினவுகிறுன். அதற்கு இவர்கள், *நாங்கள் அகிஞ்சநர்கள். கேவலம் உனது க்ருபையினுலேயே ரக்ஷிக்கப்பட வேண்டியவர்கள்* என்ற கருத்தை *கறவைகள்பின்சென்று... என்று தொடங்கும் பாசுரம் மூலமாகத் தெரியப்படுத்துகிறுர்கள்.

*நாங்கள் ஒரொரு ப்ரயோஜநத்தை விரும்பி வந்தவர்கள் அல்லர். உன் ஸந்நிதியிலேயே எப்பொழுதும் எங்களுக்கு வாஸம் ஸித்திக்க வேண்டும். காலதத்வம் உள்ளதனையும் எந்த எந்த இடத்திலே எந்தஎந்த ரூபத்தோடு நீ திருவவதாரம் செய்தருளுகிறுயோ, அந்தஅந்த இடத்திலே அந்தந்த ரூபத்துக்குத்தக்க ரூபத்தை நாங்கள் பெற்று உன்னுடன் எல்லாவித உறவு முறைகளையும் ஸித்திக்கப் பெற்று நீ உகக்கும்படியாக உனக்கே நாம் ஆட்செய்வோம்* என்கிற கருத்தை *சிற்றஞ்சிறுகாலே... என்ற பாசுரத்திலே *எற்றைக்கும் ஏழேழ்பிறவிக்கும் உன்தன்னேடு உற்றோமேயாவோம் உனக்கே நாமாட்செய்வோம் மற்றை நங் காமங்கள் மாற்று* என்ற இடத்திலே இந்த கோபிகைகள் ப்ரார்த்திக்கிறுர்கள்.

இப்படியாக ஆண்டாள் கோபிகையான பாவத்தில் அருளிச் செய்த இந்த 29 பாசுரங்களின் சரித்திரம் அமைந்துள்ளது. இப்படியாக, அதாவது ஆண்டாள் கோபிகையான பாவத்தில்

அருளிச் செய்துள்ள இந்த 29 பாசுரங்களின் அர்த்தத்தை அநுபவிக்கும் பொழுது, ஆண்டாளுடைய சரித்திரத்திலே அவள் ஸ்ரீக்ருஷ்ணனிடத்தில் அதிகமான அன்பு, பக்தி பூண்டு அவனை அநுபவித்திருக்கிறாள் என்பது மாத்திரம் இல்லை. அந்த க்ருஷ்ணனிடத்தில் அதிகமான அன்பு கொண்டிருக்கிற கோபிகைகளை அநுவர்த்திப்பது, அந்த கோபிகைகளிடத்தில் அதிகமான ப்ரீதியைக் காட்டுவது என்னும் சரித்திரமும் ஸாரமாகத் தெரிகிறது. *பாகவத அபிமாந பர்யந்தம் பகவதபிமாநத்திற்கு நாம் பாத்ர பூதர்களாக வேண்டும்* என்னும் ஒரு ரஹஸ்யத்தை ஆண்டாள் இப்பாசுரங்களின் வாயிலாக நன்றாக வெளியிட்டிருக்கிறாள் என்பதை நாம் பார்க்கலாம்.

இனி அடுத்தபடியாக நாம் அநுபவத்தில் கொள்ள இருப்பது கடைசிப் பாசுரமான *வங்கக்கடல்கடைந்த மாதவனைக் கேசவனை.. என்று தொடங்கும் முப்பதாவது பாசுரம். இப்பாசுரத்தில் ஸாரமாகக் காட்டப்பட்டுள்ள அர்த்தங்களை நம் பூர்வாசார்யர்கள் தத்தம் வ்யாக்யாநங்களில் காட்டியருளியபடி இப்பொழுது சிறிது அநுபவத்தில் கொள்வோம்.

சீரிய சிங்காதனத்திலே நப்பின்னைப் பிராட்டியுடன் பகவான் க்ருஷ்ணன் எழுந்தருளியிருக்கிறான். ஆய்ப்பாடியிலுள்ள பஞ்சலக்ஷம் குடிப்பெண்களும் திவ்ய தம்பதிகளைச் சூழ்ந்து கொண்டு அவர்களுடைய அருளாலே அநுபவ கைங்கர்யங்களைச் செய்து கொண்டு வர்த்திக்கிறார்கள். ஸ்ரீக்ருஷ்ணனைப் பெற்றதாலே கோபிகைகளுக்கு ஸந்தோஷம். இவர்களைப் பெற்ற ப்ரீதியாலே பகவான் தன் திருவுள்ளத்திலே கொண்டிருக்கிற ஸந்தோஷமானது அவனது திருமேனியிலே மிக அழகாக ப்ரகாசிக்கிறது. கோபிகைகளுக்கு ஸ்ரீக்ருஷ்ணாநுபவம். பகவானுக்கு கோபிகை

களுடைய ராஸாநுபவம். ஸ்ரீக்ருஷ்ணனை அடைந்ததாலே கோபியர்களுக்கு ஸந்தோஷம். கோபியர்களைப் பெற்றிருப்பவனாகையாலே ஸ்ரீக்ருஷ்ணன் பரம ஸந்துஷ்டனாக எழுந்தருளியிருக்கிறான். கோபிகைகள், *நமக்கு இந்த ஸந்தர்ப்பத்திலே இப்படி க்ருஷ்ணனை அடையும்படியாக ஒரு பாக்யவிஶேஷம் அமைந்ததே!* என்று மனதில் மிகவும் ஸந்தோஷப்படுகிறார்கள். *இத்தகைய ஒரு பாக்யவிஶேஷம் க்ருஷ்ணனாலே கிடைத்ததா? அல்லது பிராட்டி புருஷகாரம் செய்கிறபோது க்ருஷ்ணன் நமக்கு இப்படி ஒரு க்ருபையைச் செய்தானா?* என்று மனதில் விசாரம் பண்ணுகிறார்கள். பிராட்டி புருஷகாரம் செய்கிறபொழுதுதான் பகவான் க்ருபையைச் செய்கிறான் என்று அவர்களுக்கு மனதில் தோன்றுகிறது. அப்பொழுது அந்த பிராட்டியானவள் பகவானிடத்திலே எப்படி வந்து சேர்ந்தாள் என்று மனதில் விசாரிக்கும் பொழுது, பாற்கடலில் பகவான் அம்ருதமதநம் செய்கிற காலத்தில் பிராட்டி ஆவிர்பித்து *பஶ்யைதாம் ஸர்வ தேவாநாம் யயௌ வக்ஷ: ஸ்தலம் ஹரே: * என்றபடி அனைத்துத் தேவதைகளும் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது, மற்றவர்களைக் கணிசித்தும் பாராமல் அநாதரித்து இந்த பரமபுருஷனுடைய திருமேனியில் திருமார்பில் வந்து சேர்ந்தாள். இப்படியாகப் பெருமாள் பிராட்டியைப் பெற்றான் என்று நினைக்கிறார்கள்.

இப்படி ப்ரஸக்தாநுப்ரஸக்தமாகப் பெருமாள் அம்ருதமதநம் பண்ணியருளிய சரித்திரமும் அந்தக் காலத்திலே பகவான் மாதவன் ஆன சரித்திரமும் திருவுள்ளத்திலே அநுபவ விஷயமாக ஆக, *வங்கக்கடல்கடைந்த மாதவனைக்கேசவனை... என்று ஆண்டாள் அருளிச் செய்கிறாள் என்று ஒருவிதமாக அநுபவம். *அமுதில் வரும் பெண்ணமுதான (பெரிய திரு. 6-1-2) பெரிய பிராட்டியைப் பெற்று *அமுதங்கொண்ட பெருமான் திருமார்வன்*

(பெரிய திரு. 6-1 0-3) என்னும்படி திருமேனியிலே திரு மார்பிலே பெற்று மாதவன் என்று பெயர் பெற்ருன் என்பதாக ஒரு அநுபவம்.

இந்த இடத்தில் நாம் அவசியம் அநுபவிக்க வேண்டிய இன்னொரு அர்த்தமும் உண்டு. *ஸர்வே ஸ்வார்த்தபரா: * என்று ஒரு வசநம் உண்டு. உலகத்திலே அவரவர்கள் அவரவர்களுடைய நன்மை யைத்தான் குறிப்பாகப் பார்த்துத் தேடிக் கொள்கிருர்கள். சிலர் வெளித் தோற்றத்தில் மட்டுமே உலகத்திற்கு நன்மை செய்வதாக சில காரியங்களும் செய்வார்கள். அவற்றைப் பார்க்கும்போது இவர்கள் உலகத்துக்காக உழைக்கிறவர்கள் என்றுகூடத் தோன் றும். ஆனுலும் உள்புகுந்துப் பார்த்தால்தான் அவரவர்களுக்குத் தத்தம் நன்மையைத் தேடிக் கொள்வதிலுள்ள ருசியும் ஊக்க மும் புலப்படும். எம்பெருமான் தன்மையும் இப்படித்தான் என்று ஒருவிதமாய் ரஸமாய் ஆண்டாள் அநுபவிப்பதாக ஒரு தாத்பர் யார்த்தம். அதை மேலே காண்போம்.

துர்வாசர் பகவத் ப்ரஸாதத்தை இந்திரன் நகரில் வலம் வரும் பொழுது அவனுக்குக் கொடுக்கிருர். அப்பொழுது அதை அவன் அதன் பெருமைக்குச் சேரப் பெற்றுக் கொள்ளாமல் தன்னுடைய யானையின் மேல் வைக்கிருன். ஐராவதம் என்னும் அந்த யானை அந்த மலர்மாலையைக் கீழே எறிந்து காலால் துகைக்து விட்டது. அதைக் கண்டு கோபமுற்ற துர்வாசர் *பகவான் ப்ரஸாதத்தை நான் உனக்குக் கொடுத்தேன். நீ அதற்குரிய பெருமைக்குச்சேர அதை ஆதரிக்காமல் அவமரியாதை செய்தாய். இதற்குக் காரணம் உன்னுடைய செல்வச் செருக்கே. உனது செல்வமானது அழிந்து விடட்டும்* என்று இந்திரனை நோக்கிச் சபித்துவிட்டார். இந்திர னும் தன் செல்வத்தையெல்லாம் இழந்து கஷ்டப்படுகிருன்.

இழந்த செல்வங்களை மீண்டும் பெறுவதற்காக பகவானை ஶரணம் பற்றுகிறான். பகவானும் அம்ருதமதநம் பண்ணி ஸமஸ்த ஐஶ்வர் யங்களையும் உண்டாக்கி இந்திரனுக்குக் கொடுக்கிறான் என்பதாகச் சரித்திரம். இந்த அம்ருதமதநம் என்கிற வ்ருத்தாந்தத்தைப் பார்க்கிற பொழுது பகவானைப் போலே உலகத்தவர்களுக்கு உபகரிப்பவர் ஒருவரும் இல்லை என்றுதான் தோன்றுகிறது. பகவான் கூர்மமாக இருந்து மந்தரத்தைத் தாங்கிக் கொள்கிறான். வாசுகியைக் கயிறாகக் கொண்டு கடைகிற காலத்தில் ஒரு பக்கத்திலே தேவர்களும் மறு பக்கத்திலே அசுரர்களும் கடைகிறார்கள். அவர்களாலே கடைய முடியவில்லை. நடுவே தான் இருந்துகொண்டு கடைகிறான் பகவான். இப்படி பல ரூபங்களை எடுத்து அந்த அம்ருதமதநம் என்கிற செயலைச் செய்து அம்ருதத்தை எடுத்துத் தேவர்களுக்குக் கொடுத்தான். இவன் பிறருக்காகப் பாடுபடுகிறவன், உலகத்துக்காக உழைக்கிறவன் என்றுதான் உலகம் போற்றும். ஆனால் இந்தச் செயலைச் செய்யும்போது இவனுக்குக் குறி என்னவென்றால், உலகத்துக்காக உழைக்கிறவன், லோகத்துக்கு உபகரிப்பவன் என்ற பெயரையும் பெற வேண்டும். அதே ஸமயத்தில் ஸாக்ஷாத் அம்ருதமான, தன்னுடைய சரக்கான, பிராட்டியானவள் தோன்றும் பொழுது, அவளைப் பெற்றுவிடவும் வேண்டும் என்பதுதான். ஆக, தன்னுடைய விஷயத்தில்தான் அவனுக்கும் நோக்கு அதிகம். எம்பெருமானுடைய இந்த சரிதத்தை மனதில் வைத்துக் கொண்டு, இனி இதைப் போலுள்ள ஸ்ரீக்ருஷ்ணாவதார சரித்திரத்தையும் நாம் நோக்க வேண்டும்.

சிலகாலம் க்ருஷ்ணனுடன் கோபிகைகளைச் சேரவிடாமல் கோபாலர்கள் தடுத்துவிட, அப்பொழுது ஏற்பட்ட தர்மஹாநியால் எங்கும் மழையில்லாமல்போக மழைக்காக கோபகன்னிகைகளை நோன்பு நோற்கும்படி செய்கிறார்கள் கோபாலர்கள். அப்பொழுது

நோன்பு நோற்கும் கோபிகைகளுக்கு உதவிகளைச் செய்யுமாறு க்ருஷ்ணனை ப்ரார்த்திக்கிறார்கள் கோபாலர்கள். கோபாலர்களுக்காக, உலகத்திற்கு நன்மை ஏற்படுவதற்காக, கோபியர்களுக்குப் பொருள்களைக் கொடுத்து அதைச் செய்விப்பதாக வாக்தாநம் பண்ணி இருக்கிறான் க்ருஷ்ணன். இந்த இடத்திலே லோக காரியத்தைச் செய்கிறதாகத்தான் வெளியில் ப்ரகாஶம். ஆனால் இதைச் செய்கிற க்ருஷ்ணனுக்கு எதில் உண்மையில் நோக்கு என்றால், இந்த நோன்பு என்கிற வ்யாஜத்தால் ஆய்ப்பாடியில் உள்ள பஞ்ச லக்ஷம் குடிப்பெண்களையும் தான் பெற்றுவிட வேண்டும் என்பதே. அம்ருதமதநம் பண்ணுகிற காலத்திலே தேவ காரியத்தைச் செய்து ஒரு பிராட்டியைப் பெற்றிருக்கிறான். ஆனால், இப்பொழுது ஸ்ரீக்ருஷ்ணனாய்த் திருவவதாரம் செய்திருக்கிற காலத்தில் கோபாலர்களுடைய காரியத்தைச் செய்வதாகச் சொல்லி பஞ்ச லக்ஷம் குடிப்பெண்களாகிற பிராட்டிமார்களைப் பெற்றிருக்கிறான். ஆக அம்ருதமதநம் பண்ணிய ஸர்வேஶ்வரனைக் காட்டிலும் ஸ்ரீக்ருஷ்ணனுக்கு சாதுர்யம் அதிகம் என்று தெரிகிறது. ஆய்ப் பாடியிலே பஞ்ச லக்ஷம் குடிப்பெண்களின் நோன்புக்கு உதவுகிறதாகச் சொல்லி அவர்களையே உண்மையில் பெற்று அவ்வாறு அவர்களை அடையப் பெற்றதனால் உண்டான பரம ஸந்தோஷத்துடன் சீரிய சிங்காதனத்திலே எழுந்தருளியிருக்கிறான். பரார்த்தமாக ஒவ்வொன்றைச் செய்கிறவன் என்ற ப்ரஸித்தியைப் பெற்றிருக்கிறவன் உண்மையில் தன் காரியத்தைத் தான் செய்து கொள்வதில்தான் ருசியும் நோக்கும் உடையவனாயிருக்கிறான். இவன் இப்பொழுதுதான் இப்படியிருக்கிறான் என்பது இல்லை. எப்பொழுதுமே இப்படித்தான் இருக்கிறான் என்று ஆண்டாள் எம்பெருமானுடைய அம்ருதமதந வ்ருத்தாந்தத்தை அருளிச் செய்து எம்பெருமான் எதைச் செய்தாலும் தன்னுடைய சுயநலத்திற்காகத் தான் செய்கிறவன் என்று ஒரு

விதமாய் ரஸமாய் அநுபவிக்கிருள் என்பதை நாம் நன்ருகக் காணலாம்.

வங்கக்கடல் கடைந்தபொழுது பிராட்டி ஆவிர்ப்பவித்தாள். அப்பொழுது அவளுக்கு *மா*என்று திருநாமம். *மாயா: தவ: மாதவ:*என்று வ்யுத்பத்தி. *தவ:* என்னும் ஶப்தத்திற்கு *பதி:* என்று பொருள். பிராட்டிக்குப் பதி என்னும்படியான சிறப்பைப் பெற்று மாதவன் ஆனுன் ஸர்வேஶ்வரன். இத்தகைய மாதவனே கேசவனுக அநுபவிக்கிருள் ஆண்டாள். அம்ருதமதநம் பண்ணுகிற பொழுது பகவான் நடுவில் எழுந்தருளியிருந்து இரண்டு பக்கமும் தன் திருக்கைகளைக் கொடுத்துக் கடைந்திருக்கிருன். அப்பொழுது அவனுடைய கேஶங்கள் இங்குமங்கும் அலைந்து மிகவும் அழகாக இருந்தன என்று அநுபவிக்கிருள் ஆண்டாள். அம்ருதமதந வ்ருத்தாந்தத்தைச் சொல்லி அநுபவிக்கிற கட்டமாகையாலே, அம்ருதமதநம் பண்ணும்போது அவனுடைய கேஶங்கள் அலைந்து பரம போக்யமாக அநுபவிக்கும்படியாக இருந்தது என்பது நினைவுக்கு வர *கேசவன்* – அழகிய கேஶத்தை உடையவன் என்று அவன் கேஶத்தினுடைய அழகைச் சொல்லி அநுபவிக்கிருள் ஆண்டாள். *காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து வாச நறுங்குழலாய்ச்சியர் மத்திஞலோசைபடுத்த தயிரரவம் கேட்டிலையோ* (7) என்ற இடத்தில் கோபிகைகள் தயிர்கடையும் சரிதத்தைச் சொல்லும் பொழுது அவர்களுடைய கூந்தல் அலைகிற அநுபவத்தை அருளிச் செய்திருக்கிருள். இங்கே கேசவனை என்று பகவானுடைய கேஶம் மிகவும் அழகாக இருக்கிறது என்று அருளிச் செய்கிருள். திருப்பாவையில் இது ஒரு ஆஶ்சர்யமான அழகான அநுபவம்.

இப்பாசுர வ்யாக்யாநத்திலே ஸ்ரீஅழகியமணவாளப் பெருமாள்

நாயனார் ஒரு ஆஶ்சர்யமான பாவம் அருளிச் செய்கிறார். பக வானுக்கு விசாலமான புத்தியா அல்லது ஆண்டாளுக்கு விசால மான புத்தியா என்று விசாரம் பண்ணி, ஆண்டாளுக்கு இருக்கிற புத்திவிஶேஷம் பகவானுக்கும் கிடையாது என்று மிக ரஸமாக அருளிச் செய்கிறார்.

நன்றாகச் சொல்லி அநுபவிக்க வேண்டிய விஷயம் இது. இப்பா சுர வ்யாக்யாநத்தில் ஒரு இடத்திலே மிகவும் ரஸாநுபவமாய் ஸ்ரீஅழகிய மணவாளப் பெருமாள் நாயனார் அருளிச் செய்திருக் கும் ஒரு விஷயத்தை விண்ணப்பிக்கிறேன். பகவான் ஸ்ரீஆண்டா ளுக்கு *செவிப்பூ என்றுச் சொல்லக்கூடிய ஒரு பூவைத்தான் கொடுத்தான். சில பேருக்கு ஸம்பத்து அபாரமாக இருந்தாலும் கொடுக்கும்பொழுது கையைக் கடிக்கும். பகவான் *சதுர்ணாம் புருஷார்த்தாநாம் தாதா ஸர்வேஶ்வரோஹரி:* என்கிற ப்ரஸித்தியைப் பெற்றவன். கொடுத்துக் கொடுத்துக் கை நீண்ட வன் என்று அவனைச் சொல்லுகிறார்கள். ஆனால் அப்படிப்பட்ட ஈஶ்வரனுக்கும் கையைக் கடிக்கும் ஸ்வபாவம்தான் உண்டு என்று ரஸமாக அருளிச் செய்கிறார் ஸ்ரீஅழகிய மணவாளப் பெருமாள் நாயனார். என்னவென்றால், செவிப்பூ என்று ஒரு பூவைத்தான் அவன் கொடுத்தான். சூடிக் கொடுத்த நாச்சியாரான ஸ்ரீஆண்டா ளோ, தான் சூடிக்களைந்த புஷ்பங்களையும் அவனுக்குக் கொடுத்தி ருக்கிறாள். திருப்பாவை என்னும் முப்பது பாசுரங்களால் ஆன சங்கத்தமிழ்ப் பாமாலையையும் அவனுக்கு ஸமர்ப்பித்திருக்கிறாள். பாமாலை என்று சொல்லும்பொழுது முப்பது பாசுரங்களும் முப்பது புஷ்பங்களாகின்றன என்று அநுபவம். இந்தப் பாமாலை யின் பெருமையை ஸ்ரீஅழகிய மணவாளப் பெருமாள் நாயனார் மிக ரஸமாக அநுபவித்து அருளிச் செய்கிறார். எப்படி ஸர்வேஶ் வரனானவன் ஸர்வர்க்கும் எளியனாகும்படி இடைச்சேரியிலே

ஸ்ரீக்ருஷ்ணனுய்த் திருவவதாரம் செய்தருளினனே, எப்படி உத்தம வர்ணத்திலே திருவவதரித்த பிராட்டியும் ஆயர்சிறுமியர் கூட்டத்திலே ஒருத்தியாய் அநுகரித்து அந்வயித்தாளோ, அதே போல் அருமறையின் பொருளான வேதாந்தமும் பெருமாளேயும் பிராட்டியையும் போலவே தாழநின்று, தமிழ் மொழியாலே ஸர் வர்க்கும் அநுபாவ்யமாம்படியும், வேதமனைத்துக்கும் வித்து என்று சொல்லும்படியும் திருப்பாவையாக அவதரித்துள்ளது என்று இதன் பெருமையை ஆழ்ந்து அநுபவித்து அருளிச் செய்கிருர் பரம ரஸிகரான ஸ்ரீஅழகிய மணவாளப் பெருமாள் நாயனுர். அவன் இவளுக்குக் கொடுத்ததோ செவிப்பூ என்று ஒரு பூ. இவள் அவனுக்கு ஸமர்ப்பித்ததோ ஶ்லாக்யமான மாலே. மாலே என்று சொல்லும் பொழுது, அது எப்படிப்பட்ட மாலே என்ருல் அதன் பெருமையை ஸ்ரீநாயனுர் திருவாக்கிலேயே அநுபவிக்க வேண்டும். *பாவநமானவளவன்றிக்கே போக்யமுமாய், தலேயிலே சுமக்க வேண்டும்படியாய், ஶிரோபூஷணமுமாய் இருக்கும்* மாலே. புஷ்பங்களே பகவானுக்கு ஸமர்ப்பிக்கிற காலத்தில் அவற்றை ஒரு அடைவிலே தொகுத்துக் கொடுக்கிறது, ஒரு மாலேயாகக் கட்டிக் கொடுக்கிறது என்னும் சிறப்பு எங்கும் எப் பொழுதும் அமைவதில்லே. ஆண்டாள் அருளிச் செய்திருக்கும் இந்த திருப்பாவையின் பெருமை என்னவென்ருல், இதில் பாசு ரங்கள் அமைந்திருக்கும் விதத்திலே ஒரு அடைவு இருக்கிறது. திருப்பாவை சாற்றுமறை திநத்தில்தான், அதாவது இந்தக் கடைசி பாசுரார்த்தத்தை அநுபவத்திலே கொள்ளும் காலத்தில் தான், எல்லா பாசுரங்களின் ஸாரார்த்தங்களேயும், இந்தப் பாசுரங்கள் அமைந்துள்ள அடைவையும் அமைப்பையும் சொல்லி அநுபவிக்க முடியும். ஆனுல் இன்றைய திநமோ பண்டிகை திநமாகையால் எல்லாவித கோலாகலங்களுக்கும் இடையில், பல காரியங்களுக்கிடையில் இந்த சாற்றுமறை வைபவமாவது

நடைபெறுகிறது. இந்த பாசுரங்களின் அடைவை, அமைப்பைச் சொல்லி அநுபவிக்கும் பொழுது, அதைப் பலவிதமாக அநு பவித்து அருளிச் செய்கின்றனர் நம் பூர்வாசார்யர்கள். உதா ரணத்திற்கு ஒரு விஷயத்தை மட்டும் விண்ணப்பிக்கிறேன்.

பெருமாளைக் கிட்டி அநுபவிக்கும் காலத்தில், அவனது திருவடி முதல் திருமுடி பர்யந்தம் அநுபவிப்பது என்று முறை ஒன்று உண்டு. *சீதக்கடல் உள்ளமுதன்னதேவகி* என்ற பெரியாழ்வார் திருமொழிப்பதிகத்தில் பெரியாழ்வார் பகவானைப் பாதாதி கேஶாந்தமாக யசோதைப் பிராட்டி பாவத்தில் அநுபவிக்கிறுர். திருப்பாணுழ்வார் பெரிய பெருமாளைக் கிட்டி அநுபவிக்கும் காலத்தில் *ஆபாதசூடமநுபூய ஹரிம் ஶயாநம்* என்றபடி பாதாதி கேஶாந்தமாக அநுபவிப்பதையும் காணலாம். திருப்பா வையிலும் *பாற்கடலுள் பையத்துயின்ற பரமனடிபாடி* என்று முதலிலே பாசுரம். முடிவில் *மாதவனைக் கேசவனை* என்று பாசுரம். பகவானை பாதாதி கேஶாந்தமாக அநுபவித்திருக்கிருள் ஆண்டாள் என்று இந்தத் திருப்பாவைப் பாசுரங்களுக்கு ஒரு அடைவு சொல்லப்பட்டிருக்கிறது.

கோபிகைகளுக்கு ஆஶ்ரயணீயமான தெய்வம் கேவலம் ப்ரஹ்ம சாரி நாராயணன் அன்று. அவன் பிராட்டியுடன் கூடிய நாராயண ன்தான். திவ்யதம்பதிகள்தான் ஆஶ்ரயிக்கத்தகுந்தவர்கள். இந்த கோபிகைகளுக்கு ஆஶ்ரயிப்பதற்கு விஷயமாயுள்ள தெய்வத்தை *வங்கக்கடல் கடைந்த மாதவனைக் கேசவனை* என்று இவ் வாக்யத்திலே முதன்முதலில் வெளியிட்டிருக்கிருள் ஸ்ரீ ஆண்டாள் என்று கண்டோம். இனி *திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி* என்னும் பாசுரப்பகுதியை அநுபவிக்க வேண் டும். *திங்கள்* என்ருல் சந்திரன் என்று அர்த்தம். பதினுறு

கலைகளுடன் கூடிய சந்திரன் போன்று அழகிய திருமுகத்தை உடையவர்கள் என்று பொருள். *கூடாரை வெல்லும் சீர்க் கோவி ந்தா* என்னும் பாசுர கட்டத்தில் *சூடகமேதோள்வளையே தோடே செவிப்பூவே பாடகமேயென்றனைய பல்கலனும் யாமணி வோம்* என்று கோபிகைகள் ப்ரார்த்திக்க, பகவான் ஸ்ரீக்ருஷ்ண னும் அவர்களுக்கு இந்த ஆபரணங்களைக் கொடுத்ததாகச் சரித் திரம். அதனாலே அந்த ஆபரணங்களைப் பஞ்ச லக்ஷம் குடிப் பெண்களும் சூட்டிக் கொண்டிருக்கும் பொழுது, அந்த ஆபரணங் களுடன் கூடிய சேர்த்தியழகைப் பற்றி *சேயிழையார்* என்று ஆண்டாள் அருளிச் செய்ததாக தாத்பர்யார்த்தம்.

இந்த இடத்திலே *சேயிழையார்* என்கிற பதத்திற்கு இன்னும் ஒரு தாத்பர்யார்த்தமும் நமதாசார்யர்கள் அருளிச் செய்துள்ளனர். உபநிஷத்திலே இந்தச் சரித்திரம் வருகிறது. ஒரு ஆசார்யனிட த்திலே பல பிள்ளைகள் ஒன்று சேர்ந்து வேதத்தை நன்றாக அத் யயநம் செய்து வருகின்றனர். இதில் ஒரு பிள்ளை மாத்திரம் வேதம் மூலம் அத்யயநம் ஆனதும், மூலம் மட்டும் அத்யயநம் பண்ணல் போதாது, அதனுடைய அர்த்தத்தையும் அறிய வேண் டும் என்று ஆசைப்படுகிறான். மற்ற பிள்ளைகள் மூலம் அத்யய நம் ஆனதும் குருவினிடத்தில் விடை பெற்றுக் கொண்டு தத்தம் க்ருஹங்களுக்குச் சென்று விடுகின்றனர். இவன் மாத்திரம், தனக்கு வேதார்த்தத்தை, ப்ரஹ்ம வித்யையை உபகரிக்க வேண் டும் என்று குருவினிடத்தில் ப்ரார்த்தித்துக் கொள்கிறான். இந்த ஶிஷ்யனுக்கு வேதார்த்தத்தை உபதேஶம் செய்தருள வேண்டும் என்கிற இச்சை ஆசார்யனுக்கு இருப்பினும் சிறிது கால தாமதம் செய்கிறார். அந்தக் குருவினுடைய பத்நி கூட "இந்தப் பிள்ளை ப்ரஹ்ம வித்யையை தேவரீரிடமிருந்து பெற வேண்டும் என்று ஆசைப்படுகிறான். தேவரீர் உபதேஶம் செய்யாதபோது

அவன் உடம்பு இளேக்கிறது. அவனுக்கு ஶாஸ்த்ரார்த்தத்தை அருளிச் செய்ய வேண்டும்" என்று சொல்லிப் புருஷகாரத்தைச் செய்கிருள். அப்பொழுது அவர் தான் ஆராதித்துக் கொண்டிருந்த அக்நிகளே இந்தப் பிள்ளேயினிடத்தில் கொடுத்து ஆராதித்துக் கொண்டிருக்குமாறு நியமித்து விட்டுத் திவ்யதேஶ யாத்திரை சென்று விடுகிருர். நாளுக்கு நாள் இந்தப் பிள்ளேக்கு உடம்பு இளேத்துக் கொண்டு வருகிறது. அவன் ஆராதித்து வந்த அக்நி தேவதைகளுக்கு இவனிடத்தில் அநுக்ரஹம் உண்டாகி, ப்ரஹ்ம வித்யையை இவனுக்கு உபதேஶம் செய்துவிடுகின்றனர். ப்ரஹ்ம ஜ்ஞாநத்தைப் பெற்ற ஶிஷ்யனுக்கு ஒரு வர்ச்சஸ் உண் டாகிறது. தேஜோமயமாய் விளங்குகிருன். திவ்யதேஶ யாத்திரை சென்று திரும்பி வந்த ஆசார்யன் இவனிடம் விளங்கும் வர்ச்சஸ்ஸைக் கண்டு *என்ன! ப்ரஹ்ம ஜ்ஞாநம் பெற்றவன் போல் விளங்குகிருயே!* என்று இவனேக் கொண்டாடுகிருர். அக்நி தேவதைகள் தனக்கு ப்ரஹ்ம ஜ்ஞாநத்தை உபதேஶம் பண்ணிஞர்கள் என்று சொன்ன இவன், *ஆனுலும் ஒரு ஆசார்யன் முகமாக ப்ரஹ்ம வித்யையை அதிகரிக்கும் பொழுதுதான் அது கார்யகரமாகிறது. தேவரீர் அடியேனுக்கு உபதேஶம் செய்தருளி அதைப் பூர்த்தி பண்ணிவைக்க வேண்டும். அக்நி தேவதைகளும் இவ்வாறு சொல்லியிருக்கிருர்கள்* என்று ப்ரார்த்தித்துக் கொள்கிருன். அந்தக் காலத்தில் அந்த ஆசார்யனும் மேல் உபதேஶம் பண்ண வேண்டிய விஷயங்களேச் சொல்லி உபதேஶத்தைப் பூர்த்தி பண்ணி வைக்கிருர் என்று சரித்திரம்.

இந்த ப்ரஹ்ம ஜ்ஞாநம் உள்ளவனுக்கு முகத்தில் ஒரு அழகு, தேஜஸ் ப்ரகாஶிக்கும். இவ்வாறு கோபிகைகளுக்கும் பகவாந் க்ருஷ்ணனுடன் கூடியிருந்து க்ருஷ்ணனே அநுபவிக்கும்படியான அவஸரம் கிடைத்திருக்கிறபடியால், அந்த ப்ரஹ்ம ஜ்ஞாநம்,

ப்ரஹ்ம பக்தி, ப்ரஹ்மாநுபவம் என்கிற சிறப்பை இவர்களிடத்திலே கண்டு இத்தகைய சிறப்பை பெற்றதனுல் வந்த அழகையும் தேஜஸ்ஸையும்தான் *சேயிழையார்* என்று ஆண்டாள் கொண்டாடுவதாக ஒரு தாத்பர்யார்த்தம் நமதாசார்யர்கள் அருளிச் செய்திருக்கின்றனர். *க்ருஷ்ண விஷயீகார யோக்யதையாகிற ஆபரணத்தை உடையவர்கள். க்ருஷ்ண விஷயீகாரத்தால் பிறந்த புகராலே ஒருபடி ஆபரணம் பூண்டாற்போலேயிருக்கிறவர்கள்* என்று ஸ்ரீபெரியவாச்சான் பிள்ளையும், *ஸ்வரூப குணங்களாலும் ப்ரஹ்மாலங்காரத்தாலும் குறைவற்றவர்கள்* என்று ஸ்ரீஅழகிய மணவாளப் பெருமாள் நாயனுரும் அருளிச் செய்துள்ளனர்.

இதை முதலிலேயும் சொல்லுவதுண்டு. இந்த இடத்திலேயும் சொல்லுவதுண்டு. இந்த இடத்திலேயும் கூடப் பார்க்க வேண்டும். இந்த ப்ரபந்தத்தில் ஒரு அமைப்பு இருக்கிறது. *நீராடப் போதுவீர் போதுமினோநேரிழையீர்* என்று முதல் பாசுரத்திலேயே அருளிச் செய்திருக்கிருள் ஆண்டாள். இங்கே *திங்கள் திருமுகத்துச் சேயிழையார் * என்று வாக்யம். இரண்டு இடத்திலேயும் ஒரேஅர்த்தம்தான்.

*சென்றிறைஞ்சி* – பகவானிடத்திலே சென்று அவனை வணங்கி என்று அர்த்தம். *அங்கப்பறை கொண்டவாற்றை* – திருவாய்ப்பாடி என்னும் திவ்யதேசம். அங்கு ஸ்ரீநந்தகோபன் திருமாளிகை. அங்கே பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் பிராட்டியுடன் திவ்ய ஸிம்ஹாஸநத்திலே எழுந்தருளியிருக்கிருன். *அங்கே சென்று வணங்கிப் பறை கொண்ட விதம்* என்று அர்த்தம். *சிற்றஞ் சிறுகாலே வந்து உன்னைச் சேவித்து* என்னும் கீழ்ப் பாசுரத்தில் ஸ்ரீக்ருஷ்ணன் பறையைக் கொடுக்க வந்த பொழுது *கோவிந்தா!* என்று அவனை அழைத்து *இற்றைப்பறைகொள்வானன்று

காண்* என்று கோபியர்கள் சொல்லியிருப்பதாகப் பார்க்கிறோம். இவர்கள் வேண்டிக் கொண்டது கைங்கர்யம்தான். இங்கும் கைங் கர்யத்தைத்தான் சொல்லுகிறாள் என்று அர்த்தம். ஆனால் *அங்கப் பறை கொண்டவாற்றை* என்று அருளிச் செய்திருக்கிறாள் என் பதைக் காணும் பொழுது இங்கு பறையைத் தான் சொல்லுவதா கச் சிலர் நினைக்கக்கூடும். ஆனால் அப்படி அர்த்தமில்லை. இங்கு பறை என்னும் ஶப்தத்திற்குக் கைங்கர்யம் என்றுதான் பொருள்.

திருவாய்ப்பாடியிலே ஸ்ரீநந்தகோபர் திருமாளிகையிலே கோபி கைகள் பகவான் ஸ்ரீக்ருஷ்ணனையும் பிராட்டி நப்பின்னையையும் கிட்டி வணங்கி அவர்கள் க்ருபையினாலே தம்முடைய ஸ்வரூபத் துக்குச் சேர்ந்த புருஷார்த்தமாகிற கைங்கர்யம் என்னும் பறை யை ப்ரார்த்தித்துப் பெற்றிருக்கிறார்கள். இந்த சரிதத்தை ஆண் டாள் அநுகரித்து தரித்த பொழுது அவளிடமிருந்து வெளிவந்த ப்ரபந்தந்தான் திருப்பாவை என்று மேலே அநுபவம். *அங்கப் பறைகொண்டவாற்றை அணிபுதுவைப் பைங்கமலத்தண்தெரியல் பட்டர்பிரான் கோதை சொன்ன சங்கத்தமிழ்மாலை முப்பதும் தப்பாமே* என்று மேலே வாக்யம்.

இந்த இடத்திலே ஸ்ரீவில்லிபுத்தூர் என்னும் திவ்யதேஶமானது உலகத்துக்கே ஆபரணம் என்று சொல்லுகிறபடி விளங்கா நின் றது என்று *அணிபுதுவை* என்கிற பதத்தினால் அருளிச் செய் கிறாள் ஸ்ரீஆண்டாள். ஒரு தேஶத்திற்குப் பெருமை சொல்லும் காலத்திலே ஒரு முறையை/அருளிச் செய்திருக்கின்றனர் நம தாசார்யர்கள். ஒரு ஊரிலே ஒரு க்ருஹத்திலேயாவது ஸ்ரீராமாய ணம் இல்லை என்றால் அது ஊரே இல்லை என்கிறார் ஸ்ரீநம்பிள்ளை. ஸ்ரீராமாயணத்தை ஸேவிக்காமல் இருந்தாலும்கூட அது க்ரு ஹத்திலே இருக்க வேண்டும். அதன் ஸம்பந்தம் நமக்கு ஆவச்ய

கம். ஒரு க்ருஹத்திலேயாவது ஸ்ரீராமாயணம் இருந்தால்தான் அது இருக்கும் இடம் ஊர் எனப்படும் என்பது நம்முடைய முன்னோர்களுடைய கொள்கை. அதாவது பகவத் ஸம்பந்தம் இருக்க வேண்டும். பகவத் ஸம்பந்தம் இருக்கும் தேசத்திற்குத் தான் பெருமை உண்டு. ஆக பகவத் ஸம்பந்தம் இருக்க வேண்டும் என்று சொல்லுகிற இடத்திலே, இந்த ஸ்ரீவில்லிபுத்தூருக்கு ஏற்பட்டிருக்கிற பகவத் ஸம்பந்தம் இருக்கும் க்ரமம் – அமைப்பு மிகவும் ஆஶ்சர்யமானது. இந்த திவ்யதேசத்தில் வடபெருங் கோயிலுடையான், ஆண்டாள், பெரியாழ்வார் என்று ஒரு சேர்த்தி. ஆண்டாள் ரங்கமன்னார், கருடன் மூவரும் ஏக ஸிம்ஹாஸநத்தில் எழுந்தருளியிருக்கிறார்கள். எது தாயும் தகப்பனும் பிள்ளையைக் கூட வைத்துக் கொண்டிருக்கும் தேசம் என்று பார்த்தால் அது ஸ்ரீவில்லிபுத்தூர் என்னும் திவ்யதேசம் என்று சொல்லலாம்.

இங்கு ஒரு முறை சொல்லுவதுண்டு. ஸந்நிதியில் நாம் பெருமாளை ஸேவிக்கப் போகிறோம். அங்கே பெருமாள் எழுந்தருளி இருக்கும் இடம் ஸ்வஸ்தாநமாக இருக்க வேண்டும். ஸந்நிதியில் திருவடியை எழுந்தருளப் பண்ணியிருக்கும் இடத்தில், திருவடியினுடைய ஸ்தாநமானது பகவான் எழுந்தருளியிருக்கும் ஸ்தாநத்திற்கு கீழே இருக்க வேண்டும். ஸ்வாமிக்கு ஸ்தாநம் இப்படி இருக்க வேண்டும், தாஸனுக்கு ஸ்தாநம் இப்படி இருக்க வேண்டும் என்று ஒரு முறை இருக்கிறது. திருவடி தாஸ கோஷ்டியிலே சேர்ந்தவராகையாலே திருவடி ஸந்நிதி அமைக்கிற பொழுது தாழ்ந்த ப்ரதேசத்தில் அமைக்க வேண்டும். பகவான் எழுந்தருளி இருக்கும் இடம் மிகவும் உச்ச ஸ்தாநமாய் இருக்க வேண்டும். ஆண்டாளுடைய திருக்கல்யாண அவஸரத்தில் பகவான் கருடன் மேல் எழுந்தருளி வேகமாக வந்ததாகவும், அப்படியும் சிறிது

கால தாமதம் ஆனபடியால் சுவர் ஏறிக் குதித்து வந்ததாகவும் அப்பொழுது ரங்கமன்னுர் திருப்பாதத்தில் சிறிது அடிபட்டதாக வும் வேடிக்கையாகச் சொல்லுவதுண்டு. விவாஹம் செய்து கொள்ளும் பொழுது கருடன் சீக்கிரமாகப் பகவானைக் கொண்டு வந்து விட்டு அந்த விவாஹ மஹோத்ஸவத்தை நடத்தி வைத்த தால் அந்த உபகார ஸ்ம்ருதி தோற்ற பகவானும் பிராட்டியும் கருடனைத் தம் பக்கத்திலேயே ஏக ஸிம்ஹாஸனத்தில் வைத்துக் கொண்டிருக்கின்றனர். இந்த உலகத்திலே உள்ள திவ்யதேஶங்க ளிலே இப்படி திவ்யதம்பதிகள் தாஸனை அநுக்ரஹித்துத் தன்னுேடு கூட வைத்துக் கொள்வது என்ற சிறப்பு வேறு எந்த திவ்ய தேஶத்திற்கும் இல்லை எனலாம். அதுபற்றி இந்த திவ்ய தேஶத்திற்குப் பெருமை என்று ஒரு அநுபவம்.

அப்படிப்பட்ட ஸ்ரீவில்லிபுத்தூர் என்கிற திவ்யதேஶத்திலே, ஆண்டாளுக்குப் பெரியாழ்வார் ஸம்பந்தத்தினுல் பெருமை என்று பேசப்படுகிறது. *பைங்கமலத்தண்தெரியல் பட்டர்பிரான் கோதை* – ஸ்ரீநந்தகோபாலனுடைய ஸம்பந்தத்தினுல் க்ருஷ்ண னுக்குப் பெருமை. நப்பின்னையைப் பற்றிச் சொல்லுகிற பொழு தும், *நந்தகோபாலன் மருமகளே நப்பின்னுய்!* என்று நந்த கோபாலன் ஸம்பந்தத்தை இட்டுத்தான் நப்பின்னைக்கு பெருமை யைச் சொல்லி அழைக்கிருர்கள். நப்பின்னைக்கும் க்ருஷ்ணனுக் கும் எப்படி நந்தகோபாலனுடைய ஸம்பந்தம் சிறப்பாகப் பார்க் கப்படுகின்றதோ, அதைப் போல ஆண்டாளுக்குப் பெரியாழ்வா ருடைய ஸம்பந்தம் பெரிய சிறப்பாகப் பார்க்கப்படுகின்றது. அந்த பெரியாழ்வார் ப்ராஹ்மண குலத்திலே அவதரித்தவர். இந்த குலத்திலே பிறந்தவர்களுக்கு இந்த மாலை என்று தமிழர்கள் ஒரு முறையை வைத்திருக்கிருர்கள். அந்த முறையில் அழகான தாமரை மாலையை அவர் அணிந்து கொண்டிருக்கிறவர். அப்படிப்

பட்ட பட்டர்பிரான் *மம ஸுதா* என்று அபிமாநிக்கும்படியாகத் திருவவதாரம் செய்தவள் கோதை. அவள் அருளிச் செய்த சங்கத் தமிழ்மாலை முப்பது பாசுரங்களினுலான திருப்பாவை. *சங்கத் தமிழ் மாலை முப்பதும்* என்ற இடத்திலே, சங்கத்தமிழ் என்பத ற்கு ஒரு அர்த்தம் சொல்லுகிறுர்கள். ஸாதாரணமாக சங்கத்தமிழ் என்றுல் அது மிகவும் ப்ரௌடமான பாஷையிலே இருக்கும். அதற்குச் சில லக்ஷணங்கள் உண்டு. சில க்ரந்தங்களைச் சங்கத் தமிழ் என்று சொல்லுகிறுர்கள். அப்படிப்பட்ட க்ரந்தம் இந்த திருப்பாவை என்று ஒருத்தர் அர்த்தம் சொன்னுர். ஆனுல் நமதா சார்யர்கள் அப்படி அர்த்தம் அருளிச் செய்யவில்லை. நமதாசார்யர் கள் பொருள் அருளிச் செய்யும்பொழுது, சங்கம் என்னும் ஶப் தத்திற்குக் குழாம், கூட்டம் கூட்டமாய் என்றுதான் அர்த்தம் என்று அருளிச் செய்திருக்கிறுர்கள். கூட்டங்கூட்டமாகக் கூடியிருந்து அநுபவிக்க வேண்டிய திவ்ய ப்ரபந்தம் இந்த திருப்பாவை என்று அர்த்தம். ஒரு நல்ல பதார்த்தமாக இருந்தால் *ஏக: ஸ்வாது ந புஞ்ஜீத* என்னும்படி அதைத் தனியாக இருந்து அநுபவிப்பதில் விஶேஷமில்லை. பலர் குழாமாகக் கூடியிருந்து அநுபவிப்பது என்று ஒரு முறை உண்டல்லவா? அந்த முறையில் கூட்டங் கூட் டமாகக் கூடியிருந்து அநுபவிக்கும்படி பரம போக்யமாக இருக் கும் என்று தாத்பர்யம். இதில் முப்பது பாசுரங்களில் ஒன்றையும் விடாமல் எல்லாவற்றையும் அத்யயநம் பண்ண வேண்டும் எனக் கொண்டாடிச் சொல்லுகிறுர்கள். ஶ்லாக்யமான முப்பது ரத்நங்க ளைச் சேர்த்து ஒரு ஹாரமாகக் கோத்தால், அதில் ஒரு ரத்நம் இல்லாமல் போனுலும் கூட அது பேரிழப்பாக இருக்கும். அதைப் போல முப்பது பாசுரங்கள் கொண்ட இந்தத் திருப்பாவையில் ஒரு பாசுரத்தை விட்டால்கூட அது சரியாக இருக்காது. அவ்வளவு அழகான திவ்யப்ரந்தம் இது என்கிறுர்கள் நம் பூர்வாசார்யர்கள். *பட்டர்பிரான் கோதை சொன்ன* என்னும் இடத்திலே *பட்டர்

பிரான்" என்கிற ஶப்தத்திற்குப் பலவிதமாகப் பொருள் சொல்லு வதுண்டு. பட்டர்களுக்கு வேதம் முதலான ஶாஸ்த்ரங்களை உப கரித்தவர் என்ற முறையிலே பட்டர்பிரான் என்று அவருக்குத் திருநாமம் என்று ஒருவிதமாகப் பொருள் அருளிச் செய்யப் பட்டிருக்கிறது. பகவானுக்குப் பட்டன் என்று ஒரு திருநாமம். அந்த பகவானுக்குப் பிரானாக (உபகாரகராக) இருந்தவர் என்ற முறையிலே பட்டர்பிரான் என்று திருநாமம். பகவானுக்கு ஆழ் வார் செய்த உபகாரம் என்னவென்றால், அதைப் பலவிதமாகச் சொல்லலாம். ஈஶ்வரனே கிடையாது என்று வாதம் பண்ணுகிற உலகம் இவ்வுலகம். அப்படிப்பட்ட இந்த லோகத்திலே வேதத்தை யும், வேதாந்தத்தையும், மற்ற ஶாஸ்த்ரத்தையும், யுக்திகளையும் பரக்க உபந்யஸித்து, பகவான் என்று ஒருவன் உண்டு, அவன் தான் ஸ்ரீமந்நாராயணன் என்று பரத்வ ஸ்தாபநம் பண்ணியவர் பெரியாழ்வார். இது ஈஶ்வரனுக்கு ஜ்ஞாநிகள் பண்ணும் உதவி. இந்த விதத்தில் பெரியாழ்வார் பகவானுக்கு உபகாரகர் என்று சொல்லலாம். ஆனாலும் இதை முக்கியமாகக் கொள்ளவில்லை நமதாசார்யர்கள். இந்த இடத்திலே முக்கியமாக அறிய வேண்டி யது என்னவென்றால், ஆண்டாளைப் பெற்று வளர்த்து ஈஶ்வர னுக்குக் கன்னிகாப்ரதாநம் செய்து உபகரித்தவர் பெரியாழ்வார். அதனாலே பட்டர்பிரான் என்று திருநாமம் என்று ஸ்ரீஅழகியமண வாளப் பெருமாள் நாயனார் அருளிச் செய்துள்ளார்.

ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து ஆண்டாளைப் பெரியாழ்வார் ஸ்ரீரங் கத்திற்கு அழைத்துக் கொண்டு வருகிறார். ஸ்ரீரங்கத்திலே வெளி ஆண்டாள் ஸந்நிதி, உள் ஆண்டாள் ஸந்நிதி என்று இரண்டு உண்டு. வெளி ஆண்டாள் ஸந்நிதி அண்ணன் திருமாளிகை யைச் சேர்ந்தது. இந்த ஸந்நிதிக்கு ஒரு சரித்திரம் சொல்லு கிறார்கள். பெரியாழ்வார் ஆண்டாளை அழைத்துக் கொண்டு

ஶ்ரீரங்கத்திலே எழுந்தருளின காலத்திலே வந்து தங்கி இருந்த இடமாக இந்த வெளி ஆண்டாள் ஸந்நிதிக்கு ஒரு சிறப்பைச் சொல்லுகிறார்கள்.

திருப்பாணாழ்வாரை லோக ஸாரங்க மாமுநிகள் எழந்தருளப் பண்ணிக் கொண்டு வருகிறார். பெரியபெருமாள் ஸந்நிதியின் வாசலிலே பிரம்புக்கு வெளியே இவ்வளவு பாசுரம், பிரம்புக்கு உள்ளே இவ்வளவு பாசுரம் என்று கணக்கு சொல்லப்பட்டிருக்கிறது. **"என் அமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணா** வே" என்றபடி உள்ளே சென்ற ஆழ்வாரைக் காணோம். பெரிய பெருமாள் ஸந்நிதியில் இன்றும் ஆழ்வார் எழுந்தருளியிருப்ப தாகவே நாம் கொள்கிறோம்.

ஆண்டாளைப் பெரியபெருமாள் ஸந்நிதிக்கு அழைத்துக் கொண்டு வருகிறார் பெரியாழ்வார். பெரியபெருமாள் ஸந்நிதிக் குள் சென்ற ஆண்டாள் அங்கே அப்படியே பெரியபெருமாளுடன் சேர்ந்துவிட்டாள் என்று சரித்திரம். பெரியபெருமாள் ஆண் டாளைக் கைப்பிடித்து விவாஹம் செய்துகொண்டாரா என்றால் அப்படி சரித்திரம் அமைந்ததாகத் தெரியவில்லை. காலக்ஷேப க்ரமத்தில் அப்படிச் சொல்ல இடமில்லை. ஹரிகதா காலக்ஷேபம் பண்ணுகிறவர்கள் தமக்கென்று சில வழிகளை அமைத்துக் கொண்டிருக்கின்றனர். அந்த முறையில் அவர்கள் ஆண்டாள் திருக்கல்யாணத்தைப் பரக்க வைபவமாக அருளிச் செய்கிறார் கள். சில அம்ஶங்கள் இல்லாமல் போனாலும் இருக்கிறதாக வைத் துக் கொண்டு அநுபவிப்பது என்று ஒரு முறை உண்டு. அந்த முறையில் ஆண்டாளுடைய திருக்கல்யாண மஹோத்ஸவத்தை அநுபவிப்பது என்று ஒரு முறை இருக்கிறது. நம்முடைய பூர்வா சார்யர்களுடைய அபிப்ராயத்தாலே, ஆண்டாளுடைய **திருக்**

கல்யாண வைபவம் அவளுக்கு ஸ்வப்ந ரூபமாக அமைந்திருக்கிறதேதவிர அது ப்ரத்யக்ஷ அநுபவரூபமாக அமையவில்லை.

ஆனால் ஸ்ரீவில்லிபுத்தூரிலே சில சரித்திரங்கள், சில க்ரந்தங்கள் உண்டு என்று சொல்லுகிறார்கள். வல்லபதேவ ராஜா பெரியாழ்வார் பெண்பிள்ளையான ஆண்டாளுக்கு ஸ்வயம்வரம் ஏற்படுத்தியதாகவும், இந்த ஸ்வயம்வரத்திற்கு வந்த ராஜகுமாரர்களாக 108 திவ்ய தேசத்து எம்பெருமான்களையும் குறிப்பிடுகிறார்கள். பொதுவாக ஸ்வயம்வரம் என்று சொன்னால் ராஜகுமாரர்கள் எல்லாருமே போகலாம். ஆனால் ஆண்டாளுடைய ஸ்வயம்வரத்திற்கு 108 திவ்யதேசத்து எம்பெருமான்கள்தான் வரக்கூடியவர்கள். ஸ்வயம்வர மண்டபத்திலே 108 திவ்ய தேசத்து எம்பெருமான்களும் எழுந்தருளியிருக்கிறார்கள். ஆண்டாளுடைய தோழி அவளை அழைத்துக் கொண்டு ஓரோர் திவ்யதேசத்து எம்பெருமானிடமும் சென்று அந்தந்த எம்பெருமான்களின் சிறப்புகளைப் பாடுவது போன்றவைகளைச் செய்கிறாள். அந்தக் காலத்தில், வடமதுரையில் திருவவதரித்த கண்ணன், திருவேங்கடமுடையான், திருமாலிருஞ்சோலைமலை அழகர், திருவரங்கத்தெம்பெருமான் அழகிய மணவாளன் ஆகிய எம்பெருமான்களைத்தான் முக்கியமாகச் சொல்லுவர். இதிலே வடமதுரைக் கண்ணன், திருவேங்கடமுடையான், திருமாலிருஞ்சோலைமலை அழகர் இவர்கள் எல்லாரும் இரண்டாம் பக்ஷமாக ஆகிவிட்டனர் ஆண்டாளுக்கு. அழகியமணவாளன்தான் ஆண்டாளுடைய நாயகன். கண்ணன் நாயகன் என்று சொன்னால், அழகியமணவாளன் தான் கண்ணன் என்று ப்ரதிபத்தி பண்ணி அவனை அடைந்ததாகச் சொல்ல வேண்டும்.

இங்கே *பட்டர்பிரான் கோதை* என்று சொன்ன இடத்திலே

ஜநகர் ஸீதா பிராட்டியைச் சக்ரவர்த்தி திருமகனுக்குக் கன்னிகா ப்ரதாநம் செய்து கொடுக்கும் காலத்திலே *இயம் ஸீதா மம ஸுதா ஸஹத,ர்மசரீ தவ | ப்ரதீச்ச, சைநாம் ப,த்,ரம் தே பாணிம் க்,ருஹ்ணீஷ்வ பாணிநா* || என்று சொல்லியதுபோல, *இயம் கோதா மம ஸுதா...* என்று பெரியாழ்வார் அபிமாநித்து ஆண்டாளை அழகிய மணவாளனுக்குக் கன்னிகாப்ரதாநம் செய்து கொடுத்ததாகவும், பகவான் கோதையின் திருக்கைகளைப் பிடித்து விவாஹம் செய்து கொண்டனன் என்றும் சொல்லுவர். இந்த இடத்திலே *இயம் ஸீதா மம ஸுதா...* என்ற ஶ்லோகத்திலே எந்த எந்த விஶேஷார்த்தங்கள் எல்லாம் சொல்லப்பட்டிருக்கின் றனவோ அந்தந்த விஶேஷார்த்தங்களை எல்லாம் இங்கேயும் சொல்லி அநுபவிக்கலாம்படி அவ்வளவு பொருத்தமாக அமைந் திருக்கின்றன என்பதையும் பார்க்கலாம்.

ப்ரஸங்காத் இரண்டொரு விஶேஷார்த்தங்களை விண்ணப்பிக்கி றேன்.பகவான் ஶரணாகதி தர்மத்திலே ஊற்றம் பெற்றிருக்கிற வன். பகவானுக்கு எந்த தர்மத்திலே ஊற்றம் உண்டோ அந்த தர்மத்திலே கூட இருந்து உதவியைச் செய்பவள் பிராட்டி. அந்தச் சிறப்பைச் சொல்லித்தான் *ஸஹ தர்ம சரீ தவ* என்று கன்னிகா ப்ரதாநம் பண்ணியதாக அங்கே அர்த்தம் கொள்ளப் படுகிறது.

ஒரு சேதநன் எம்பெருமானுடைய திருவடிகளை உபாயமாகப் பற்றும் பொழுது கூட இருந்து அந்த சேதநனை பகவான் ஏற்றுக் கொள்ளும்படிச் செய்பவள் பிராட்டி. இந்தப் புருஷகார க்ருத்யத் திலே பெரிய பிராட்டிக்கு ஏற்றமா? அல்லது ஸ்ரீபூமிப்பிராட்டிக்கு ஏற்றமா? என்று பார்க்க வேண்டும். பெரியபிராட்டிக்குப் புருஷ காரத்வம் உண்டு. அவள் ஒருத்தியிடத்தில்தான் புருஷகாரத்வம்

என்பது பூரணமாக நிரம்பியுள்ளது. மற்ற பிராட்டிமார்கள் எல்லோரும் பெரிய பிராட்டியாருடைய அம்ஶம் என்று சொல்லுவது ஒரு முறை. பெரிய பிராட்டியார், பூமிப்பிராட்டியார் என்கிற இரண்டு பிராட்டிமார்களுக்குள்ளே புருஷகாரம் செய்வதில் பூமிப் பிராட்டிக்குத்தான் மிகவும் ஏற்றம் உண்டு என்கிற பக்ஷமும் உண்டு. இந்தப் பெருமையைப் பலவிதமாகச் சொல்லலாம். ஸ்ரீவேதாந்த தேஶிகன் கோதா ஸ்துதியில் ஒரு ஶ்லோகத்திலே ஒரு பாவத்தை மிக ஆஶ்சர்யமாக அருளிச் செய்திருக்கிறுர். பகவானுக்கு வலது பக்கத்திலே ஸ்ரீதேவியும் இடது பக்கத்திலே பூதேவியும் எழுந்தருளியிருக்கிறுர்கள். ஒரு சேதநன் நேரே வந்து இவர்களுக்குமுன் நிற்கிறுன். இந்த சேதநனைப் பார்த்ததும் இவன் செய்த குற்றங்களெல்லாம் பகவானுக்குத் திருவுள்ளத்திலே பட இவ்வளவு குற்றங்களையும் செய்துவிட்டு மஹாபாபியாய் நம் முன்னே வந்து நிற்கிறுனே என்று அவனைப் பார்ப்பதற்கும் பிடிக்காமல் வலது பக்கம் திரும்பி ஸ்ரீதேவி நாச்சியாரைப் பார்க்கிறுன் பகவான். அப்பொழுது ஸ்ரீதேவியானவள் பகவானைப் பார்த்து, வாஸ்தவமாக இவன் பல பாவங்களைப் பண்ணிவிட்டு வந்து நிற்கிறுன். இருப்பினும் லோகத்திலே கர்மாநுகுணமாகப் பிதா புத்ர ஸம்பந்தம் உள்ள இடத்திலேயும் புத்ரன் தவறி நடந்தால் அதற்காகப் பிதா அவனைக் கைவிடுவ தில்லை. அவனைச் சேர்த்துக் கொண்டு பரிபாலநம் பண்ணிக் கொண்டு போகிறுன். நீயோ இவனுடன் நிருபாதிக ஸம்பந்தம் பெற்றவன். நீ இவன் செய்திருக்கும் குற்றங்களைப் பார்க்கிறுயே தவிர உன்னிடம் அவனுக்கு இருக்கும் ஸம்பந்தத்தைப் பார்க்கவில்லை. உனக்கிருக்கும் திருக்கல்யாணகுணங்களையும் பார்க்கவில்லை. உன்னிடத்தில் **வாத்ஸல்யம்**, தயை போன்ற திருக்குணங்கள் உண்டு. இந்த **திருக்குணங்களுக்கு** இவனை ஆட்படுத்தி அங்கீகரித்து ஏற்றுக் **கொள்ள வேண்டும்** என்று வாதாடுகிறுள்.

ஸ்ரீதேவி சொல்லும் வார்த்தைகள் பெருமாளுக்கு த்ருப்திகரமாக இல்லை. இந்த சேதநனைப் பார்த்தால் அவன் செய்திருக்கும் பாவங்கள் நினைவுக்கு வருகிறது. இவளைப் பார்த்தாலோ இவள் அவனை ஏற்றுக் கொள்ளும்படிச் சொல்லுகிறுள். பூமிப்பிராட்டியார் என்ன சொல்லப் போகிருளோ என்று அவளைப் பார்க்கிருன் பகவான். இவள் என்ன சொல்லுகிருள் என்ருல், அங்கே வந்திருக்கும் சேதநனுக்குக் குற்றமே கிடையாது என்கிருள். *இவன் குற்றம் செய்தாலன்ருே நீ இவனை உபேக்ஷிக்க வேண்டும். நீ இவனை அங்கீகரிக்க வேண்டும்* என்று சொல்ல பகவானும் அந்த சேதநனைத் தன் திருக்கண்களாலே கடாக்ஷித்து அவனை ஏற்றுக் கொண்டு விடுகிருன். பக்கத்திலே பூமிப்பிராட்டி இல்லாதிருக்கும் பக்ஷத்தில் சேதநனுக்கு அபிமுகமாக அந்த பகவானுடைய திருமுகமண்டலம் இருப்பதற்கு ப்ரஸக்தியே கிடையாது என்று அருளிச் செய்கிருர் தேசிகன். இங்கே ஒரு உண்மை உண்டு. யாருடைய புருஷகாரம் சேதநனுடைய விஷயத்திலே கார்யகரமாக ஆகின்றது என்ருல் பூமிப்பிராட்டியாருடைய புருஷகாரம்தான் பகவான் சேதநனை ஏற்றுக் கொள்ளும்படிச் செய்கிறது என்று ஒருவிதமாய் ரஸமாய் அருளிச் செய்கிருர் தேசிகன். புருஷகார க்ருத்யத்தில் பூமிப்பிராட்டியாருக்குச் சாதுர்யம் மிகவும் அதிகம். ஈட்டிலே நம்பிள்ளையும் ஓரிடத்திலே ஸர்வேச்வரன், ஸ்ரீதேவி, பூதேவி என்னும் மூவருடைய ஸ்வபாவத்தைப் பற்றியும் அருளிச் செய்கிருர். ஸர்வேச்வரனுனவன், பிராட்டி புருஷகாரம் பண்ண சரணம் என்று தன்னிடம் வந்தவனை ரக்ஷிக்கிறவன். அது அவனுடைய ஸ்வபாவம். பெரிய பிராட்டியாருடைய ஸ்வபாவம் என்ன என்று அருளிச் செய்யும் பொழுது அதைச் சிறிது குறைத்துச் சொல்லியிருக்கிருர். அது பூமிப்பிராட்டியாருடைய ஏற்றத்தை அருளிச் செய்யும் கட்டம். பெரிய பிராட்டியாருடைய ஸ்வபாவத்தைப் பற்றிச் சொல்லும் பொழுது, குற்றத்தை காட்டிக்

கொடுத்துப் பிறகு ரக்ஷிப்பதற்கு வழி தேடுபவளாகவும், அதே சமயத்தில் பூமிப்பிராட்டியாரைப் பற்றிச் சொல்லும் பொழுது இவள் எம்பெருமான் சேதநனின் குற்றத்தையே கணிசிக்க விடாமல் செய்பவளென்றும் அருளிச் செய்திருக்கிருர் .இந்த *ஸஹ தர்ம சரீ தவ* என்ற இடத்திலே ஶரணுகதி தர்மத்திலே ஊற்றம் பெற்றிருக்கிற ஸர்வேஶ்வரனுக்குக் கூட இருந்து புருஷ காரத்தைச் செய்கிறது என்ற செயலைப் பார்க்கிற பொழுது பூமிப் பிராட்டிக்கு ப்ராதாந்யம் பார்க்கப்படுகிறது. அப்படிப்பட்ட பூமிப் பிராட்டியாரின் அவதார .விஶேஷமாகக் கொண்டாடப்படுபவள் ஆண்டாள்.

இங்கே இன்னொரு விதமாகவும் மிகவும் ரஸமாகச் சொல்லுவது ண்டு. அங்கே ஜநகர் ஸீதாபிராட்டியாரைச் சக்ரவர்த்தி திருமகனு க்குக் கன்னிகாப்ரதாநம் பண்ணிக் கொடுத்தவர். இங்கே பெரி யாழ்வார் கோதையை அழகிய மணவாளனுக்குக் கன்னிகாப்ரதா நம் பண்ணிக் கொடுப்பவர். ஜநகரையும் பெரியாழ்வாரையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். ஸீதாபிராட்டியாரையும் கோதா பிராட்டியாரையும் எடுத்துப் பார்க்க வேண்டும். அதுபோல சக்ர வர்த்தி திருமகனையும் அழகிய மணவாளனையும் பார்க்க வேண் டும். ஜநக மஹாராஜா கர்மயோக பக்தி நிஷ்டர். பெரியாழ்வா ரோ மங்களாஶாஸநபரர். மங்களாஸாஶநபரருக்கும் பக்தியோக நிஷ்டருக்கும் எவ்வளவோ வாசியுண்டு. ஸீதை தன்னுடைய திருவவதார காலத்திலே பலருக்கு உதவிகளைச் செய்தவள். பிற் காலத்தில் இருப்பவர்களுக்கு உதவும்படி க்ரந்தத்தை உபகரிக்க வில்லை. ஆண்டாளோ ப்ரபந்தத்தை உபகரித்துப் பிற்பட்டவர்க ளுக்கும் நன்மையைத் தேடித் தந்தவள். ஸீதையைவிட ஆண் டாளுக்குப் பெருமை உண்டு. சக்ரவர்த்தி திருமகனுக்குப் பெரு மாள் என்று திருநாமம். ஸ்ரீஆண்டாளைக் கைப்பிடித்த அழகிய

மணவாளனுக்கோ பெரியபெருமாள் என்று திருநாமம். பெருமாளாலேயே ஆராதிக்கப்பட்டவன் பெரிய பெருமாளாகிய அழகிய மணவாளன். ஆகையினாலே ஜநகர் ஸீதையை ராமனுக்குக் கொடுத்துக் கன்னிகா ப்ரதாநம் பண்ணி வைத்ததைவிடப் பெரியாழ்வார் ஸ்ரீஆண்டாளை அழகியமணவாளன் கைப்பிடித்து விவாஹம் செய்து கொள்ளும்படி கன்னிகாப்ரதாநம் செய்தருளிய மஹோத்ஸவம் மிகவும் பெருமை வாய்ந்தது என்று ஒருவிதமாக மிகவும் ரஸம் தோற்ற அநுபவிப்பதுண்டு.

இப்படிப்பட்ட பெருமை வாய்ந்த ஸ்ரீஆண்டாள் அருளிச் செய்த தமிழ்மாலை முப்பது என்று சொல்லுகிறபொழுது – தமிழ்மாலை என்பதற்கு மிக ரஸமாக வ்யாக்யாநம் அருளிச் செய்துள்ளனர் நம் பூர்வர்கள். கண்ணன் தன்னைத் தாழவிட்டுத் திருவவதரித்து கோகுலத்தில் கோபாலனாக ப்ரகாஶிக்கிறான். லோக மாதாவான பிராட்டி ஆழ்வார் திருமகளாகத் திருவவதரித்து கோபிகையாக அநுகரிக்கிறாள். வேதமானது தமிழ் மொழியில் திருப்பாவையாகத் திருவவதரிக்கிறது. இதில் பாடப்பட்ட எம்பெருமானும் பரம ஸௌலப்ய பூர்த்தி பெற்றவன். இதைப் பாடுகிறவளும் பரம ஸௌலப்யத்துக்கு எல்லைநிலமாகப் பார்க்கப்படுகிறாள். பாட்டும் வேதம் போல் இல்லாமல் எல்லோரும் அத்யயநம் பண்ணும் படியாகவும், மிகவும் எளிமையாகவும் இனிமையாகவும் வேதமனைத்துக்கும் வித்தாகவும், எல்லோரும் க்ஷேமம் பெற்று இன்புறுமாறும் அமைந்துள்ளது. இப்படி ப்ரமாணமும் அதனால் அறியப்படும் ப்ரமேயமும் தம்மைத் தாழ விட்டு வரவர அவற்றுக்கு ஏற்றம் அதிகமாகிறது. இந்த விஷயம் ஸ்ரீஅழகிய மணவாளப் பெருமாள்நாயனார் அருளிச் செய்த ஆசார்யஹ்ருதயத்தில் ஸ்பஷ்டம். ஸமுத்ர ஜலமானது யாவரும் உபயோகப்படுத்தும் வகையில் இல்லை. மேகமானது அந்த ஸமுத்ர ஜலத்தை எடுத்து

வர்ஷிக்கும் பொழுது அது எல்லோருக்கும் நன்மை பயக்கிறது. வேதம் கடல் போன்றது. அது எல்லோருக்கும் பயன்படுமாறு தமிழ் மொழியில் அதை ப்ரபந்தமாக ஆக்கிக் கொடுத்து மஹா உபகாரம் புரிந்திருக்கிருள் ஆண்டாள். இப்படிப்பட்ட இந்த திவ்யப்ரபந்தத்தை யார் யார் அத்யயநம் பண்ணி அநுபவிக்கிருர்களோ அவர்கள் திவ்ய தம்பதிகளின் பரம க்ருபைக்குப் பாத்ரமாகி இங்கும் க்ஷேமம், அங்கும் க்ஷேமம், எங்கும் க்ஷேமம் என்று சொல்லுகிறபடி க்ஷேமத்தைப் பெற்று இன்புற்று நன்ருக வாழ்ந்து போருவார்கள்.

ஸ்ரீஆண்டாள் ரங்கமன்ஞர் திருவடிகளே சரணம்
ஆழ்வார் எம்பெருமாஞர் ஜீயர் திருவடிகளே சரணம்

http://acharya.org